பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 20 ஞாயிற்றுக்கிழமை 03.05.2020 கதிர் 179

## 702 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே.03

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 12 பேர் நேற்றுச் சனிக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பக்கம் 02 »

## பொலிஸ் அதிகாரி பணி இடைநீக்கம்

கொழும்பு,மே.03

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினார் எனக் குற்றம் சுமத்தப்படும் மாத்தறை பொலிஸ் நிலையத்தின் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் திணைக்களம் பக்கம் 02 »

## ஏப்ரல் மாதத்தில் மட்டும் 522 பேருக்கு கொரோனா

இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 522 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலின் அடிப்படையில் மார்ச் மாதம் 31ஆம் திகதி 143 ஆக இருந்த கொரோனா தொற்றாளர்களது எண்ணிக்கை ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி 665 ஆக உயர்வடைந்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த ஏப்ரல் பக்கம் 02 »

## மற்றொரு தமிழரும் கொரோனாவுக்கு பலி!



புலம்பெயர்ந்து லண்டனில் வசித்து வந்த பக்கம் 02 »

## இது ரகசியம் அல்ல!

ஊடகங்களைவைத்துக்கொண்டு அவற்றை நம்பித் தேர்தலில் இறங்கிய முதலாளிமார் – அரசியல் முதலாளிமார் – தேர்தல் சண்டைக்குத் தத்தமது ஊடகங்களைப் பயன்படுத்தி ஆளாளுக்கு சேறு பூசிய மையை வடக்கு பக்கம் 02 »

# பகுதி பகுதியாகத் தேர்தலை நடதுவது பற்றிப் பரிசீலனை

## தேர்தல் ஆணையம் ஆலோசனை

கொழும்பு,மே.03

பொதுத்தேர்தலை நாடு முழுவதும் ஒரே நாளில் நடத்தாமல் பகுதி, பகுதியாக நடத்துவது குறித்து தேர்தல் ஆணையம் ஆராய்ந்து வருவதாக தேர்தல் ஆணையகத்தின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. பக்கம் 02 »

## அட்டன் தோட்டத்தில் 9 வீடுகள் தீக்கிரை!

அட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எபோட்ஸிலி தோட்டத்தில் 14 வீடுகளைக்கொண்ட நெடுங்குடியிருப்பில் நேற்றிரவு 7 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின. மேலும் 5 வீடுகளுக்கு பகுதியளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் 50 இற்கும் மேற்பட்டவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர். இவர்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உரிய இடமொன்றில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தோட்டத்தில் கோவிலுக்கு பக்கம் 02 »

## 600 மதுபான போத்தல்களுடன் ஒருவர் பொலிஸாரினால் கைது



கொழும்பு, மே.03

சுமார் 21 லட்சம் ரூபா பெறுமதியான 600 மதுபானப் போத்தல்களுடன் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

மேல் பக்கம் 02 »

## விருப்பு வாக்கு இலக்கங்கள் வழங்கப்படாது

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்த வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கு இலக்கங்கள் போதைக்கு வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இதனைக் கூறினார் என சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஜாதிக சமகி ஜனபல பக்கம் 02 »

## பொலிஸாரால் கைதான 4 பெண்களுக்கும் பிணை



யாழ்ப்பாணம்,மே.03

வடமராட்சி கிழக்கு, குடத்தனை – மாளிகைத்திடலில் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் ஊரடங்குச் பக்கம் 02 »

## போரை வென்றதைப் போல் கொரோனாவுக்கும் முடிவுரை

### புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பராக்கிரம சில்வா கூறுகிறார்

கொழும்பு,மே.03

30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமை போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் எண்ணக்கருவுக்கு அமைவாக கொரோனா வைரஸை நாட்டில் முழுமையாக இல்லாதொழிக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டு என்று அரச புலனாய்வுப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பராக்கிரம சில்வா தெரிவித்தார்.

அரச தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்றுக் காலை வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில் – பக்கம் 02 »

## உயிரிழந்த வயோதிபரின் சடலத்தை முல்லைத்தீவில் எரிப்பதற்கு எதிர்ப்பு



முல்லைத்தீவு, மே.03

கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வந்தபோது உயிரிழந்தவரின் சடலத்தை முல்லைத்தீவில் எரிப்பதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் மையத்தில் கொழும்பு குணசிங்கபுரத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர். இதில் 80 வயதுள்ள வேலு சின்னத்தம்பி பக்கம் 02 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வேதனையோடு ரசித்துக் கொண்டனர்.

இப்போது 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற மட்டத்திற்கு விடயம் விவகாரமாகிவிட்டதாகத் தகவல்.

இருவருக்கும் இடையில் ஊடகம் மூலம் நடத்தப்பட்ட சேறுவாரல் விவகாரம் தேர்தல் ஆணையம் வரைச் சென்றுவிட்டது.

அடுத்து வரும் நாள்களில் தேர்தல் ஆணையம் விசேட விசாரணைக்குழுவை யாழ்ப்பாணம் அனுப்புகின்றது – இந்த விடயத்தை ஆழ விசாரிப்பதற்காக.

அரச நிவாரணத்தை தமது நிவாரணம் போல காட்டி விநியோகித்தார் ஓர் ஊடக முதலாளி என்று மற்றைய தரப்பில் பகிரங்கக் குற்றஞ்சாட்டு.

தேர்தலின்போது அந்த ஊடகத்தின் முதலாளி தன்னைத் தோற்கடிப்பதற்காக தனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் தனது ஊடகம் மூலம் வேண்டுமென்றே மோசமான முறையில் – சட்டத்துக்கு முரணான வகையில் – அபவாதக் குற்றச்சாட்டுக்களைத் திட்டமிட்டு அடுக்குகின்றார் என்பது மற்றவரின் பட்டோலை.

இரண்டு குற்றச்சாட்டுகளுமே மிக மோசமான விளைவுகளைக் கொண்டவை.

ஒன்று உண்மை என்றால் மற்றது பொய் என்றாகி விடும்.

ஆகவே இந்த இழுபறியில் யாராவது ஒருவர் சிக்கலில் மாட்டுவது தவிர்க்க முடியாததாகும்.

ஆனால் இந்தப் பிரச்சினையில் விடயத்தை – தனது குற்றச்சாட்டை – நிரூபிக்க வேண்டிய – ஆதாரங்களை காட்ட வேண்டிய – பொறுப்பு ஒரு தரப்புக்கு உண்டு. அத் தரப்பு அதில் தவறினால் மற்றத் தரப்பின் குற்றச்சாட்டு உண்மையாகி விடும்.

*'இரண்டு பேருக்கும் சான்ஸ் ஐம்பதுக்கு ஐம்பது... அதனால் சமாதானமாகிப் போங்களேன்...!'* என்பது இரண்டு தரப்பு ஊடக ஆதரவையும் இலக்கு வைத்திருக்கும் பிற தரப்புகள் கூறும் அட்வைஸ்.

நம் நாட்டில் ஒரு பழைய சினிமாப் போட்டி ஒன்று உண்டு. அது காலம் காலமாகத் தொடர்வது. எம்.ஜி.ஆர்.– சிவாஜி; கமல் – ரஜனி; இடையில் தலை – தளபதி என்று அந்தப் போட்டி நீளும்.

சம்பந்தப்பட்ட இருவரும் சமாதானமாகப் போனாலும் அவர்களின் இரசிகர்கள் சமாதானமாக மாட்டார்கள். முஷ்டியை முறுக்கி கொண்டு மோதத் துடிப்பார்கள்.

அதுபோல இங்கும் ஊடக அரசியல் வாதிகள் (அல்லது அரசியல் ஊடக முதலாளிகள்) இணங்கிப் போனாலும் பின்னால் நிற்கும் வால்கள் சும்மா இருக்கப்போவதில்லை. எரியும் வீட்டுக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் நிலைமையின் விபரீதம் விளங்கிக் கொண்ட தரப்பு 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற நிலையில் இருப்பதாகவும் தகவல்.

இதற்கு மேல் நான் விவரிக்கப் போனால் வாசகர்களாகிய உங்களுக்கும் கோபம் வந்துவிடும்.

'யானைக்கும் சிங்கத்துக்கும் சண்டை. இடையில் சருகுப் புலிக்கு என்ன வேலை?' – என்று நீங்கள் கேட்பது புரிகின்றது. அதனால் நிறுத்திக் கொள்கிறேன். மீண்டும் நாளை சந்திப்போம்...!

–மின்னல்–

## பகுதி பகுதியாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஆணையத்தின் மூன்று ஆணையாளர்களும் ஒன்று கூடி இது குறித்து ஓர் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார் என 'த சண்டே ரைம்ஸ்' இன்றைய இதழில் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் தேர்தல் ஆணையாளர்கள் மூவரும் கூடி பல்வேறு விடயங்களை ஆராயவிருந்தனர்.

அதற்கு முன்னர் இந்தக் கருத்தைத் தேர்தல் ஆணையாளர் அப்பத்திரிகைக்குத் தெரிவித்திருப்பார் எனக் கருதப்படுகின்றது.

தேர்தல் வாக்களிப்பு பிரதேச ரீதியாக வெவ்வேறு நாள்களில் நடைபெற்றாலும், வாக்கெண்ணுதல் நாடு முழுவதிலும் ஒரே நாளில் நடத்தப்படலாம் என்றும் அவர் கூறினாராம்.

பகுதி பகுதியாகத் தேர்தலை நடத்துவதற்கு உரிய சட்ட ஏற்பாடுகள் இல்லாவிடினும், உரிய – விரிவான – அறிவித்தலுடன் அப்படித் தேர்தலை நடத்துவதற்கு இயலுமாக இருக்கும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

அப்படிப் பகுதி பகுதியாகத் தேர்தலை நடத்துவது என்றாலும் வாக்களிப்பு எத்தனை நாளுக்கு நீளும் என்பது குறித்தும் ஆணையாளர்கள் கூடி முடிவெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## போரை வென்றதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதாரத்துடன் தொடர்புபட்ட இந்த நோய் தொற்றைத் தடுப்பதில் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வரும் நடவடிக்கையில் தனிப்பட்டவர்களின் பிரத்தியேகத் தகவல்களுக்கு எந்தவித குந்தகமும் ஏற்படாது. இதற்கான உறுதியை எம்மால் தெரிவிக்க முடியும். எமது பணி நோயை இல்லாதொழிப்பதற்கு – நோயைத் தடுப்பதற்கான சுகாதாரப் பிரிவின் முயற்சிகளுக்கு – முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது இந்தத் தொற்று நாட்டில் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம். நாட்டிலிருந்து இதனை முழுமையாக இல்லாதொழிப்பதற்கான வலிமை சுகாதாரப் பிரிவைப் போன்று பாதுகாப்புத் தரப்பினருக்கும் உள்ளது – என்றார்.

உலகில் புலனாய்வுத் துறையில் முன்னணியில் விளங்கும் நாடுகளைப் போன்று இலங்கைப் புலனாய்வுப் பிரிவும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதா என்ற கேள்விக்கு –

உலகில் இஸ்ரேல் போன்ற நாடுகள் புலனாய்வுத் துறையில் முன்னணியில் திகழ்கின்றன. இருப்பினும் இவ்வாறான நாடுகளின் புலனாய்வு விடயங்களை நாம் பின்பற்றவில்லை. எமது நாட்டுக்கெனப் புலனாய்வுச் சேவையொன்று எம்மிடம் உண்டு. இதன் மூலமே எவராலும் முடிவுக்கு கொண்டு வரமுடியாது என்று தெரிவிக்கப்பட்ட 30 வருட கால யுத்தத்தை நாம் வெற்றிகரமாக நிறைவு செய்தோம். இதற்குத் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய அப்போது தலைமை தாங்கினார். அவரது எண்ணக்கருவுக்கு அமைவாக விடயங்களின் அடிப்படையில் தற்போது இந்த கொவிட் 19 தொற்றை இல்லாதொழிப்பதற்கு புலனாய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. – என்று பதில் கூறினார்.

## 600 மதுபான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுமொரு தமிழர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவரான லோகசிங்கம் பிரதாபன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் கா. லோகசிங்கத்தின் மகனான அவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

கொரோனா நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டிருந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும் சிகிச்சை பலனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளார்.

## ஏப்ரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதத்தில் மட்டும் 522 பேருக்கு புதிதாகக் கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுவரையான காலகட்டத்தில் அதிகபட்சமான கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாளாக ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி அமைந்துள்ளது.

அன்று 65 பேர் புதிதாக இனங்காணப்பட்டிருந்தனர். ஏப்ரல் மாதத்தில் கொரோனா தொற்றாளர்கள் எவரும் இனம் காணப்படாத நாளாக ஏப்ரல் 16ஆம் திகதி அமைந்துள்ளது.

அதேபோன்று கொரோனா தொற்று ஏற்பட்ட இலங்கையர் ஒருவர் இனம் காணப்பட்ட மார்ச் மாதம் 11 முதல் இதுவரை மூன்று நாட்கள் மட்டுமே எந்தவொரு நபருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்படாத நாளாக அமைந்துள்ளது.

மார்ச் மாதத்தின் 25 மற்றும் 27 ஆகிய இரு நாட்களிலும் ஏப்ரல் 16 ஆகிய மூன்று நாட்களில் மட்டுமே எந்தவொரு கொரோனா தொற்றாளரும் இலங்கையில் கண்டறியப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

மாத்தறை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் சில்வா மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் பலிஹக்கார ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து இந்த வழக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இந்த பொலிஸ் அதிகாரி நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் அதிகாரி, கொரோனா வைரஸ் பரவும் ஆபத்தான பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரை மாத்தறைக்கு அழைத்து வந்து, கெக்கனதுர – கலல்ல என்ற பிரதேசத்தில் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்க வைத்து அவருடன் தொடர்பில் இருந்து வந்துள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரியும் பெண்ணும் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பருக்கு கொரோனா தொற்று இல்லை எனப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இருவரின் சடலங்களும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத பரிசோதனை அறையில் வைக்கப்பட்டுள்ளன.

வேலு சின்னத்தம்பி என்பவரின் சடலத்தைப் பொறுப்பு எடுக்க யாரும் இல்லாத காரணத்தால் மருத்துவமனை நிர்வாகம் அதனை அடக்கம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த நபரின் உயிரிழப்பு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முள்ளியவளை பொலிஸாரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமைக்கு இணங்க சடலம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரின் அனுமதியுடன் குமாரபுரம் பகுதி கிராம சேவகர் ஊடாக மாவடிப் புலவு மயானத்தில் எரியூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சடலம் ஊர்தியில் ஏற்றப்பட்ட பின்னர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை வளாகத்தைச் சூழ்ந்துகொண்ட குமாரபுரம் இளைஞர்கள் அந்தச் சடலத்தைத் தமது கிராமத்தில் எரிக்கவேண்டாம் என்று எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் அதனை வேறு இடத்தில் எரிக்குமாறு கோரியுள்ளனர்.

இதற்கமைய சடலத்தை வவுனியாவில் உள்ள மின்சார மயானத்தில் எரியூட்டுவதற்கு கொண்டு செல்வதற்குப் பணம் இல்லை என முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இளைஞர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அதற்கான செலவை இளைஞர்கள் சேர்த்து கொடுப்பதாகத் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து முள்ளியவளை பொலிஸார் அந்தச் சடலத்தை வவுனியா கொண்டு சென்று மின்சார எரியூட்டலில் எரிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

## 702 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 702ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. 172 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

523 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## விருப்பு வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது விருப்பு வாக்கு இலக்கங்கள் தற்போதைக்கு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை விருப்பு வாக்கு இலக்கங்கள் வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தை மீறியமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 4 பெண்களையும் பிணையில் விடுவித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

மணல் கடத்தல் கும்பல்களை நாம் ஆதரிக்க முடியாது. அவர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படவேண்டியவர்கள். ஆனால் எந்தக் குற்றமும் செய்யாத பெண்களைத் தாக்கப் பொலிஸாருக்கும் உரிமை இல்லை. இந்த விடயம் பாரதூரமான மனித உரிமை மீறல். அத்துடன், ஊரடங்குச் சட்ட வேளையில் பருத்தித்துறை வைத்தியசாலை பாஸ் உடன்தான் இரண்டு பெண்கள் வைத்தியசாலைக்கு உணவு எடுத்துச் சென்றனர். அதன்போதே அவர்கள் கைது செய்யப் பட்டனர் என சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கனக ரட்ணம் சுகாஷ் நீண்ட சமர்ப்பணத்தை நீதிவான் முன்னிலையில் முன்வைத்தார்.

அதனடிப்படையில் பொலிஸாரின் கடும் ஆட்சேபனையின் பின் சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கி பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

## அட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகிலுள்ள நெருங்குடியிருப்பிலேயே இவ்வாறு தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

ஊரடங்கால் மக்கள் வீட்டுக்குள் இருக்கையில் திடீர் தீபரவல் ஏற்பட்டதால் மக்கள் பதறியடித்துக்கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு ஓடினர்.

தீப்பரவலை அடுத்து பொலிஸாருக்கும், தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த அட்டன், டிக்கோயா நகரசபையின் தீயணைப்பு பிரிவினர், மக்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர்.

இதற்கிடையில் அப்பகுதியில் மக்கள் குவிந்ததால், சமூக இடைவெளியை பின்பற்றி உரிய வகையில் இருக்குமாறு பொலிஸாரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்தால் உயிர்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும், பெருமளவில் பொருட்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர். ஒரு சில பொருள்கள் மாத்திரமே மக்களால் பாதுகாக்கக்கூடியதாக இருந்தது.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

# மத்தள விமான நிலையம் போன்றன அங்கு இருக்கும்போது இங்கு மக்கள் மத்தியில் இராணுவத் தனிமைப்படுத்தல் ஏன்?

## கேள்வி எழுப்புகின்றார் முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வரன்



**கொரோனோ அபாய காலத்தில் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த கேள்விகளை - சந்தேகங்களை- எழுப்பியிருக்கின்றன; பல சந்தேகங்களை உண்டுபண்ணியிருக்கின்றன.**

**-வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சீ.வீ.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தகளிலேயே படையினருக்கான தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைப்பதானாது இங்குள்ள மக்களுக்கும் கொரோனாவைப் பரப்புவதான ஓர் எண்ணமா அல்லது சர்வாதிகார ஆட்சிக்கு அடித்தளமாக அமையப்போகின்ற விடய்மா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொரோனோ நிலைமைகளில் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: –

கொரோனோ வைரஸின் தாக்கம் உலக ரீதியாக எம்மால் உணரப்பட்டு வருகிறது. வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்தக் கால கட்டத்தை வேறு காரணங்களுக்காகவும் பதவியில் உள்ளோர்கள் பாவிக்கப் பார்கின்றார்களா என்ற பயம் எம்மைப் பீடித்து இருக்கின்றது.

அதாவது கொரோனோ வைரஸின் தாக்கத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் இராணுவத்தினரை எதற்காக தமிழ் மக்கள் வாழும் பிரதேசதங்களில் – தமிழ் மக்கள் மத்தியிலே அடையாளம் காட்டி – அங்கு படையினரைக் கொண்டு வந்து வைக்கின்றார்கள் என்ற கேள்வி எழுக்கின்றது. அது பலத்த சந்தேகங்களையும் உண்டாக்குகின்றது.

குறிப்பாக இங்கிருப்பவர்களுக்கு கொரோனோத் தொற்று குறைந்தவாறு இருக்கும் நிலையிலே அங்கு தொற்றுச் சந்தேகத்திலுள்ளவர்களையும் இங்கு கொண்டு வந்து வைத்து இங்குள்ளவர்களுக்கும் கொரோனாவைக் கொடுக்க வேண்டுமென்ற ஓர் எண்ணமா?

அல்லது இதை அடிப்படையாக வைத்து வரப் போகும் ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு இது அடித்தளமாக அமையப் போகின்றதா என்று பலவிதமான கேள்விகள் எங்கள் மனதில் எழுந்து கொண்டிருக்கின்றன.

எங்கள் வைத்தியர்கள், தாதியர்கள் என சுகாதார துறையினர் உன்னதமான சேவையில் ஈடுபட்டு வருகின்றார்கள். ஆனால் அதற்கு அப்பால் அரசியல் ரீதியாக பல்வேறு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றமையைப் பார்க்கும் போது இந்தக் கொரோனோவைத் தங்கள் தனிப்பட்ட அரசியலுக்காகப் பாவிக்க சிலர் முற்படுகின்றனரா என்ற சந்தேகம் எம்மை வாட்டிக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சந்தேகத்தை நீக்குவது அரசாங்கத் தரப்பின் கடமையாகும். தமிழ் மக்களிடையே – அதாவது குறைந்த பட்சத்தில் கொரோனோவால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடையே – அங்கிருந்து கொரோனோச் சந்தேகத்தில் கொண்டு வந்து தனித்து வைக்கப் பார்ப்பது வரும்காலத்தில் தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும்?

மத்தளை விமான நிலையத்தில் போதிய இடவசதி உள்ளிட்ட பல வசதிகள் எல்லாம் இருக்கிறது. ஆகவே அங்கு கொண்டு சென்று இராணுவத்தினரைப் பராமரிக் காமல் இங்கு ஏன் மக்களிடையே – மக்களினை மையமாக வைத்து – அவர்களைச் சுற்றி படையினரை வைக்க எத்தனிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். பல்வேறு அரசியல் காரணங்கள் இதற்கு அடிப்படையாக இருக்கக் கூடுமோ என்ற எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

ஆகவே இந்தச் சந்தேகங்களை எல்லாம் தீர்க்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அவற்றைத் தீர்ப்பார்க்கள் என்று எதிர்பார்க்கின்றேன் என்றார்.

# வாழைச்சேனையில் ஊரடங்கில் மணல் கடத்தியவர்கள் சிக்கினர்



ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள வேளையில் நேற்றுக் காலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி சென்ற இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் ஒரு கனரக வாகனம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளமையுடன், மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாகனேரி, பொண்டுகள்சேனை பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி சென்றவர்கள் வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மடக்கப்பட்டனர்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் சட்டவிரோத மணல் ஏற்றி வரும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன எனவும், அதனைத் தடுப்பதற்கு தனது தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன மேலும் தெரிவித்தார்.

# ஊரடங்கை மீறுவோர் தொகை அதிகரிப்பு!

கொழும்பு, மே. 03

மேல் மாகாணத்திலும், புத்தளம் மாவட்டத்திலும் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை மீறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகப் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதனைக் கருத்தில் கொண்டு அந்தந்த மாவட்டங்களில் விசேட பொலிஸ் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நண்பர்களையோ அல்லது வெளியாட்களையே வீட்டில் தங்கியிருக்க அனுமதிக்கவேண்விடாம் எனவும் அவர் அந்த பிரதேச பொது மக்களைக் கேட்டுள்ளார்.

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422




காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## நெருக்கடிக்குத் தீர்வு!

**நேற்றுக் காலை தேர்தல் ஆணையகத்தில் தேர்தல் ஆணையாளர் மூவர் முன்னிலையில் காட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், பிரதிநிதிகள் பங்கு பற்றிய கூட்டத்தில் பெரும்பாலும் கருத்து நிலைப்பாடு ஒன்றுபட்டதாகவே இருந்தது.**

**பொதுஜன பெரமுனவின் செயலாளரும் வாசுதேவநாணயக்காரவின் கட்சியின் செயலாளரும் தவிர ஏனைய பிரதிநிதிகள் எல்லாம் ஒரே நிலைப்பாட்டில் இருந்தனர்.**

**நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் நீங்கும் வரை பொதுத் தேர்தலைத் திகதி குறிப்பிடாது தள்ளி வைக்க வேண்டும். தேர்தலுக்கான திட்டவட்டமான திகதி குறித்து ஒதுக்கப்படும் வரை வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கங்களை அறிவிக்கக் கூடாது. – இந்த இரண்டும் பெரும்பாலும் ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளினதும் நிலைப்பாடாக இருந்தது.**

**இந்த விடயங்களை செவிமடுத்த தேர்தல் ஆணையாளர்கள் கட்சிகளின் நிலைப்பாட்டைத் தாங்கள் பரிசீலித்து சாதகமான முடிவை அறிவிப்பார்கள் என்று கூறியிருக்கின்றனர்.**

**பெரும்பாலும் ஜூன் 20 தேர்தல் நடக்க வாய்ப்பில்லை என்பதே பொதுவான நிலைப்பாடாக இருந்தது.**

**அதை எந்த நேரத்திலும் தேர்தல் ஆணையகம் அறிவிக்கக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.**

**ஆனாலும், தேர்தலை ஒத்திவைக்கும் ஆணையம் அதைத் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்குமா, அல்லது இன்னொரு திகதியைப் பெயருக்குக் குறிப்பிட்டுத் தள்ளி வைக்குமா என்பதே விடைதெரியாத வினாவாக நேற்று இருந்தது.**

**மாவட்ட ரீதியாக வேட்பாளர்களின் இலக்கத்தை அறிவிக்கும் திட்டத்தை ஆணையம் பெரும்பாலும் ஒத்திப்போட்டு விட்டது என்றும் –**

**தேர்தலுக்கான திட்டவட்டமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் பற்றிய விவரத்தைத் தேர்தல் ஆணையம் இனிமேல் அறிவிக்கும் என்றும் – தெரியவந்தது.**

**தேர்தல் ஆணையத்தின் நேற்றைய கூட்டத்தில் இன்னொரு முக்கிய விடயமும் இடம்பெற்றது.**

**தற்போதைய கொரோனா வைரஸ் தெற்றுப் போன்ற நெருக்கடிகளுக்க மத்தியில் பொதுத் தேர்தலை நடத்துவதாயின் தேர்தல் தொடர்பான சட்டங்களில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இப்போதைய சட்டங்களின் படி ஒவ்வொரு வாக்காளரின் கைளிலும் அதிகாரி மைபூச வேண்டும். வாக்குச்சீட்டை கைகளில் கொடுக்க வேண்டும். வாக்களிக்கும் இடத்தில் பொதுப் பாவனைக்குப் பேனை, பென்சில் வைக்க வேண்டும். ஒரே வாக்களிப்பு அறையில் பல பிரதிநிதிகள் கூடியிருப்பது தவிரக்க முடியாதது.**

**வாக்கு எண்ணும் இடத்திலும் அப்படிக் கூட்டம் நெருக்கமாக நிற்கும் நிலை உள்ளது. இவற்றை எல்லாம் மாற்ற வேண்டும் என்று விளக்கமளிக்கப்பட்டது.**

**கொரோனா பரவும் பீதிக்கு மத்தியில் இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றி தேர்தல் நடத்துவது சாத்தியமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.**

**இப்போதைய கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்துவதாயின் தேர்தல் சட்டங்களில் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றார் பிரதம தேர்தல் ஆணையாளர்.**

***“அப்படியானால் நல்லது. அதை ஜனாதிபதியிடம் எழுத்தில் கொடுங்கள்”* – என்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்.**

**அதற்கு முதலில் பின்னடித்தார் தேர்தல் ஆணையாளர்.**

**புதிய சட்டங்களைக் கொண்டு வருவதனால் அதற்கு நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.**

***“நான் எப்படி நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி ஜனாதிபதியாகக் கோருவது?”* – என்றார் தேர்தல் ஆணையாளர்.**

**அதற்கு சரியான பதில் கொடுத்தார் சுமந்திரன்.**

***“உங்களை யார் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதியைத் கோரச் சொன்னார்கள்? உங்களுக்கு அப்படி ஜனாதிபதியைக் கோர ஆணையோ அல்லது அதிகாரமோ கிடையாது. ஆனால் தேர்தல் நடத்துவதற்கு ஏதுவான விடயங்களை நிறவேற்றித் தருமாறு நீங்கள் ஜனாதிபதியைக் கோர முடியும் என்று அரசமைப்பின் 33 (1) (ஈ) பிரிவு கூறுகின்றது. நீங்கள் நீதி, நியாயமான முறையில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்து கொடுப்பது ஜனாதிபதியின் கடமை என்று அப்பிரிவு கூறுகின்றது. அதன்படி புதிய சட்டங்கள் யாக்கப்பட வேண்டும் என்பதை நீங்கள் எழுத்தில் ஜனாதிபதியிடம் கொடுங்கள். எப்படி அதைச் செய்வது என்பதை ஜனாதிபதி தீர்மானிக்கட்டும். ”* – என்றார் சுமந்திரன். தலையாட்டினர் ஆணையாளர்கள்.**

**இவை எல்லாமே நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதே ஒரே தீர்வு என்கின்றன. ஆனால் அது ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் விளங்குவதாகவில்லை. அதுதான் இப்போதைய நெருக்கடியை மேலும் தீவிரமாக்கும் பின்னடைவு நிலை.**

# பிரதமர் நாளை கூட்டும் கூட்டத்தை சஜித் அணி பகிஷ்கரிப்பது எதற்காக?

## அதன் செயலாளர் விளக்கி அறிக்கை



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென நாளை தமது அலரி மாளிகை இல்ல மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டப்படும் மாநாட்டை சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளது.

அதற்கான காரணங்களை விளக்கி ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார விசேட அறிக்க. ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன் விவரம் வருமாரு:-

கொரோனா தொற்று நோய் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய எதிர்க்கட்சி என்ற

முறையில் நாம் தொடக்கத்திலிருந்தே அவதானமாக இருந்ததுடன், ஜனவரி 24 மற்றும் பெப்ரவரி 25 ஆகிய திகதிகளில் இரு தடவைகள் பாராளுமன்றத்தில் இந்த விடயம் தொடர்பில் நாட்டின்கவனத்தைஈர்த்துள்ளோம். ஆனால், அப்பொழுதும்கூட அரசாங்கம் பொறுப்பற்ற விதத்திலேயே நடந்துகொண்டது.

அவ்வாறே சம்பிரதாயபூர்வமான எதிர்க்கட்சியாகவன்றி, பொறுப்புணர்ச்சியுடன் கூடிய, மனித உயிர்களின் பெறுமதியை மதிக்கின்ற எதிர்க்கட்சியாக நாம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றோம். தொற்றுநோய் தீவிரமடைந்த பின்னர் இரண்டு தடவைகள் பிரதமர் கட்சி தலைவர்களை அழைத்து, கொரோனா அபாயத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றுவது சம்பந்தமாக பேச்சு நடத்தியதுடன், அவ்விரு சந்தர்ப்பங்களிலும் நாம் கலந்துகொண்டோம். இந்த நோயிலிருந்து விடுபடுவதற்கு பொறுப்புடன் நாம் காரிய மாற்றியதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கல், அரச பொறிமுறையை உரிய விதத்தில் செயற்படுத்துதல், அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பை முறையாகக் கையாளுதல், நிவாரண உதவிகளை அரசியல் மயப்படுத்தாதிருத்தல், பரிசோதனைகளை துரிதமாகவும் முறையாகவும் மேற்கொள்ளல், கொரோனா ஒழிப்பு சம்பந்தமான செயலணிக்கான சுகாதார மற்றும் பாதுகாப்பு அங்கிகளை போதிய அளவில் பெற்றுக்கொள்ளல் போன்றவை பற்றியும் அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை முன்வைத்தோம். ஆனால், அந்த ஆலோசனைகள், யோசனைகளில் எது பற்றியும் அரசாங்கம் எந்த முயற்சியும் எடுக்காததையிட்டு கவலையடைகின்றோம்.

இந்த அனர்த்தத்தை தவிர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் தகராறுகள் நிலவிய போதிலும், நாம் அவற்றை பொருட்படுத்தாது அரசாங்கத்துடன் ஒத்துழைக்கின்றோம்.

ஆறு வாரங்களாக அரசாங்கத்தினால் சட்டபூர்வமற்ற விதத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் கொரோனா ஒழிப்பு என்ற அத்தியாவசியமான காரணத்தினால் அந்த விடயத்திலும்கூட நாம் நிதானமாக நடந்துகொள்கிறோம்.

ஆனால், அரசாங்கம் அநேகமாக ஊரடங்குச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்ததோடு, சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களை கைது செய்வதற்கும், அரசுக்கு நெருக்கமானவர்களுக்கு ஊரடங்கு வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுப்பதற்கும், அவசர கால நிலைமை என்ற போர்வையில் நிவாரண விநியோகத்தை அரசியல் மயப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தது.

ஆறு வாரங்களாக பொதுமக்கள் அளவு கடந்த அர்ப்பணிப்புடன் நடந்து கொண்டமையோடு எல்லாவிதமான வேதனைகளையும், துன்பங்களையும் சகித்துக்கொண்டு செயலாற்றினர். இது,இந்த அனர்த்தத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் முடியும் என்ற அபார நம்பிக்கையினாலேயே ஆகும்.

ஆயினும், ஆறு வாரகால கொரோனா -19 ஒழிப்பு செயற்பாட்டில் அரசாங்கம் வெற்றி பெற்றுவிட்டது என்பதனை காணமுடிகின்றதா?

அவசர காலத்தில்கூட ஆறு வார காலத்தில் கொரோனா அனர்த்த வரைபடக்கோடு கீழ் நோக்கி செல்வதனையே சுட்டியிருக்க வேண்டும். ஆனால், அது ஏறுமுகமாகவே உயர்ந்து செல்கிறது.

ஏனைய நாடுகளில் அநேகமானவை அவசர காலத்தைப் பிறப்பிக்காமல் முடக்கல் செயற்பட்டினூடாகவே சில வாரங்களுக்குள் கொரோனா ஒழிப்பு வரை கோட்டை கீழ் மட்டத்திற்குக் கொண்டுவந்துள்ள போதிலும் அவசரகாலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலைமையில் இந்த நாட்டில் கொரோனா அனர்த்த வரைகோடு மேல் நோக்கி செல்வது கவனத்தில் கொள்ளவேண்டிய பாரதூரமான நிலைமையாகும்.

கொரோனோ ஒழிப்பு செயற்பாட்டினூடாக உலகின் பல நாடுகளில் சுகாதாரத் துறையைச் சேர்ந்த அநேகருக்கே கொரோனா தொற்று ஏற்பட்ட போதிலும், இலங்கையின் பாதுகாப்பு துறையினரில் ஒரு சாராருக்கே இந்நோய் தொற்றியுள்ளது. இதிலிருந்து விளங்குவது கொரோனா ஒழிப்பு செயற்பாட்டிற்கு பாதுகாப்புப்படையினரை ஈடுபடுத்தியிருந்தும் அவர்களுக்கு அவசியமான உரிய தரம் வாய்ந்த தற்பாதுகாப்பு சுகாதார மேலங்கிகள் வழங்கப்படாமலும், தொற்றுநோய் சம்பந்தமான பயிற்சி அளிக்கப்படாமல் அந்த படை வீரர்களை உயிராபத்திற்கு உட்படுத்தியதுமாகும்.

இவ்வாறான எல்லா நிலைமைகளுக்கு மத்தியிலும் நாட்டின் மீதான பற்றுள்ள கட்சிகளில் முக்கிய கட்சியினரான நாங்கள் கடந்த 26 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்களுக்கு ஒருமித்து எழுதிய கடிதமொன்றை அனுப்பியிருந்தோம்.

அந்த கடிதத்தை நாங்கள் மிகவும் கண்ணியமான முறையில் அனுப்பினோம். அதில் மறைவான ஏதும் நிகழ்ச்சி நிரலோ, முறைகேடான கோரிக்கையோ இடம்பெற்றிருக்கவில்லை.

அதில் அடங்கியிருந்தது, ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பிறகு சட்டபூர்வமாக அரச நிதியைச் செலவு செய்வதுபற்றியும், கொரோனா ஒழிப்பு சட்டமூலங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குஒத்துழைப்பு வழங்குவது பற்றியுமாகும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குப் பதிலாக, மக்களது இயல்பு வாழ்க்கையைக் கட்டியயழுப்புவதற்கும், அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அவசியமான ஆதரவை நிபந்தனையின்றி அரசாங்கத்துக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான எழுத்துமூல உத்தரவாதம் பற்றி அக்கடிதத்தில் உள்ளடங்கியிருந்தது.

ஆயினும், அக்கடிதத்திற்கு ஜனாதிபதி அவர்களின் தரப்பிலிருந்து எந்தவிதத்திலும் நாகரிகமற்ற பதில் அவரது அதிகாரியின் மூலம் அனுப்பப்பட்டதையிட்டு நாம் கவலையடைகின்றோம்.

எதிர்க் கட்சியின் பிரதான கட்சித் தலைவர்களினால் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவது சம்பந்தமாக அனுப்பப்பட்ட கடிதத்தை முக்கியமற்றதாக கணித்து, புறக்கணிப்பதே ஜனாதிபதியால் அதிகாரியயாருவரினூடாக அனுப்பப்பட்ட பதிலின் உள்ளடக்கமாகும்.

இந்த நெருக்கடியான நிலைமையில் கட்சி, நிற பேதங்களுக்கு அப்பால் செயற்படுவதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி எங்களால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பொன்னான உள்ளடக்கத்தை அவராகவே கவனத்தில் எடுக்காதபோது, பிரதமரின் தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதலில் ஆறு பொலிஸார் பலி



பாக்தாத்,மே03

ஈராக் நாட்டில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் 6 பேர் உயிரிழந்தனர்.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் பல முக்கிய நகரங்களை கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் அமெரிக்கா மற்றும் உள்நாட்டு அரசுப்படைகள் நடத்திய அதிரடி தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலில் பல பயங்கரவாதிகள் உயிர் பயத்தில் பாலைவனப்பகுதிகளை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

அவர்களில் சிலர் யூப்ரெட்டஸ் நதிக்கரையோரம் அமைந்துள்ள பாலை வனப்பகுகளில் பதுங்கியுள்ளனர். அங்கிருந்தவாறு அவ்வப்போது கொரில்லா போர் முறை பாணியில் அதிரடியாக பயங்கரவாத தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இவர்களை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அந்நாட்டு பொலிஸாரும்,இராணுவத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அரசுப்படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே அவ்வப்போது மோதல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் அந்நாட்டின் பாக்தாத் நகரில் இருந்து சுமார் 70 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள சலாஹூதின் மாகாணம் தல் அல் - ஹாப் என்ற கிராமத்தில் பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்று அமைந்துள்ளது.

அந்த சோதனைச்சாவடியை குறிவைத்து இன்று ஐ.எஸ். பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பாதுகாப்பு பணியில் இருந்த 6 பொல்ஸார் உயிரிழந்தனர்.

# பாகிஸ்தானில் கொரோனா வைரஸினால் பாதிப்புற்றோர் 18 ஆயிரத்துக்கும் அதிகம்



இஸ்லாமாபாத்,மே.03

பாகிஸ்தானில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 18 ஆயிரத்தை கடந்துள்ளது.

உலக நாடுகளை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் பாகிஸ்தானிலும் வேகமாக பரவி வருகிறது.

இந்நிலையில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் பாகிஸ்தானில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 1,297 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் அங்கு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 18, 155 ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானில். நேற்று ஒரேநாளில் கொரோனா தொற்றுக்கு 32 பேர் பலியாகினர். அங்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை தற்போது 432 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 4700 க்கும் அதிகமானவர்கள் கொரோனா நோயிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

மேலும் இதுவரை பாகிஸ்தானில் 1,93,859 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

# சிகிச்சை அளித்த டாக்டரின் பெயரை தமது பிள்ளைக்கு வைத்த பிரி. பிரதமர்

லண்டன்,மே03

தமக்கு சிகிச்சை அளித்த டாக்டரின் பெயரை பிறந்த தமது குழந்தைக்குச் சூட்டினார் பிரிட்டிஷ் போரிஸ் ஜோன்ஸன்

ஐரோப்பிய நாடான பிரிட்டனின் பிரதமர், போரிஸ் ஜோன்ஸன் (வயது55), இவருடைய காதலி, கேரி சைமண்ட்ஸ், ( வயது32), இவர்களுக்குக் கடந்த சில நாள்களுக்கு முன் லண்டன் மருத்துவ மனையில் ஆண் குழந்தை பிறந்தது.

முன்னதாக ஜோன்ஸனுக்குக் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு தீவிர சிகிச்சை பெற்று குணமடைந்த நிலையில் ஆண் குழந்தை பிறந்தது. இவர் தற்போது அரசுப் பணிக்கு திரும்பியுள்ளார்.

இந்நிலையில் போரிஸ் ஜான்சன் காதலி கேரி சைமண்ட்ஸ் தனது இன்ஸ்டாகிராமில் தனது குழந்தை புகைப்படத்தை வெளியிட்டு பதிவேற்றி கூறியவை வருமாறு :-



கொரோனா பாதிப்பால், போரிஸ் ஜோன்ஸன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது தீவிர சிகிச்சை அளித்து வந்த டாக்டர் நிக்கோலஸ் என்பவரின் பெயரை சேர்த்து வில்பிரட் லேவெரி நிக்கோலஸ் ஜோன்ஸன் என எங்கள் குழந்தைக்குப் பெயர் சூட்டியுள்ளோம். - இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# அணுசக்தியால் இயங்கும் ஸ்கிஃப் ஏவுகணையை

## வடிவமைத்துள்ள ரஷ்யா



மேற்கில் ஆதிக்கம் செலுத்துவதற்காக ஆபத்தான ஆயுதங்களை அதிகபடுத்தும் ரஷ்யா இப்போது உலகின் மிகப்பெரிய ஸ்கிஃப் ஏவுகணை என்று அழைக்கப்படுவதை வடிவமைத்துள்ளது.

ஆபத்தான அணுசக்தியால் இயங்கும் ரஷ்யாவின் ஸ்கிஃப் ஏவுகணை கடலோரத்தில் உள்ளது என்றும் கிழக்கு மற்றும் மேற்கு இடையே ஒரு போர் வெடித்தால் கடைசி முயற்சியாக ரஷ்யா இதைப் பயன்படுத்தலாம் என்றும் டெய்லி ஸ்டார் தெரிவித்துள்ளது.

செயல்படுத்தப்பட்டதும், ஸ்கிஃப் ஏவுகணை 6,000 மைல் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கும். இது 60மைல் வேகத்தில் பயணிக்க கூடியது. கோபால்ட் 60 என்ற செயற்கை கதிரியக்கத்தால் கடல் மற்றும் கரையின் பெரிய பகுதிகளை அது மாசுபடுத்தும்.

பாதுகாப்பு நிபுணர்களின் கூற்றுப்படி, இந்த ஏவுகணை ரஷ்யாவை தோற்கடிக்க முடியாது என்று உலகிற்கு ஒரு செய்தியை அனுப்பும் நோக்கம் கொண்டதாக உள்ளது.

# ஊடக குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத் தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.

உங்களின் சுயவிபரக்கோவையினை kalaikkathironline@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தொடர்புகளுக்கு:
076 443 8623

தகவல் - நிர்வாகி
பசுமை ஊடகம்

## கொரோனா சிகிச்சைக்கான

# ரெம்டிசிவிர் மருந்துக்கு அமெ. அவசர ஒப்புதல்

கொரோனா நோயாளிகள் விரைந்து குணமடைய உதவும் ரெம்டிசிவிர் மருந்துக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு அவசர ஒப்புதல் அளித்துள்ளது.

கைலீட் சயின்சஸ் நிறுவனம் தயாரித்துள்ள ரெம்டிசிவிர் மருந்தைக் கொரோனா நோயாளிகளுக்கு ஊசிமூலம் நரம்புவழியாகச் செலுத்திச் சோதனை செய்ததில், சராசரியாக 11 நாள்களில் குணமடைவதாகத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு இந்த மருந்துக்கு அவசர ஒப்புதல் வழங்கியுள்ளது. இயல்பாக ஒரு மருந்தைச் சோதனை செய்த நாளில் இருந்து 90 நாள்களில் ஒப்புதல் வழங்கப்படும் என உணவு மற்றும் மருந்து நிர்வாக ஆணையர் ஸ்டீபன் ஹான் தெரிவித்தார்.

இரத்தத்தில் ஆக்சிஜன் அளவு குறைந்தோருக்கும், சுவாசக் கருவிகளின் உதவி தேவைப்படுவோருக்கும் மட்டுமே ரெம்டிசிவிர் மருந்தைப் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கைலீட் சயின்சஸ் நிறுவனம் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் பேருக்குப் பத்து நாள் சிகிச்சைக்குத் தேவைப்படும் 15 லட்சம் டோஸ் மருந்தை அமெரிக்க அரசுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.



# தமிழகத்தில் நேற்று மட்டும் 231 பேருக்குக் கொரோனா

## இதுவரை 2,757 பேருக்குத் தொற்றியது

சென்னை,மே03

இதுவரை இல்லாத அளவுக்கு நேற்று தமிழகத்தில் ஒரே நாளில் 231 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸுக்கு எதிரான போர் நடைபெற்று வருகிறது. தமிழகத்தின் தொடர்ந்து நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் பாதித்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் நேற்று முன்தினம் 203 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். இதுவே அதிக பாதிப்பாகப் பேசப்பட்டது.

இந்த நிலையில் இதையும் மிஞ்சும் வகையில் நேற்று 231 பேர் ஒரே நாளில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் தமிழகத்தில் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஆக 2,757 அதிகரித்துள்ளது.

மாநிலத்திலேயே சென்னையில் தான் கொரோனா பாதிப்பு அதிக அளவில் உள்ளது.

சென்னையில் நேற்று மட்டும் 174 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னையில் கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை 1,257 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 29 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 1,341 ஆக உயர்ந்துள்ளது. ஒரே நாளில் 231 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மதுப்பிரியர்களை மகிழ்விக்க நடவடிக்கை

# மதுக்கடைகளைத் திறக்க கர்நாடக அரசு அனுமதி!

பெங்களூரு, மே.03

கர்நாடகாவில் கொரோனா நோய்ப் பரவல் இல்லாத பகுதிகளில் மதுக்கடைகளை திறக்க அரசு அனுமதி அளித்துள்ளது. கர்நாடகாவில் நாளை திங்கள் முதல் மதுக்கடைகளை திறக்கலாம்; பார்களுக்கு அனுமதி இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்தும் விதமாக நாடு முழுவதும் மார்ச் மாதம் முதல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஊரடங்கு காரணமாக மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளன.

கொரோ னாவை கட்டுப்படுத்த மே 17 ஆம் திகதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், ஊரடங்கில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. குறிப்பாக வைரஸ் பாதிக்கப்பட்ட பகுதிகள் சிவப்பு, மஞ்சள், பச்சை என மூன்று மண்டலங்க ளாக பிரிக்கப்பட்டுள் என.

இந்நிலையில், கர்நாடகாவில் மதுக்கடைகளை மே 4ஆம் திகதி முதல் திறக்க அம்மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. சிவப்பு மண்டல பகுதிகளை தவிர எஞ்சிய இடங்களில் உள்ள அனைத்து மதுக்கடைகளையும் திறக்கலாம். மதுப்பிரியர்கள் 3 அடி சமூக இடைவெளி விட்டு முகக்கவசம் அணிந்து மது வாங்கிச் செல்ல வேண்டும். மதுக்கடைகள் திறக்கப்பட்டாலும் பார்களுக்கு அனுமதியில்லை என அம்மாநில கலாத்துறை மந்திரி நாகேஷ் தெரிவித்துள்ளார்.

# வைரஸ் தொற்றாளர் எண்ணிக்கை இந்தியாவில் 37,776 ஆக உயர்வு!

புதுடெல்லி,மே03

இந்தியாவில் கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை 37,776 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருக்கிறது. தினந்தோறும் இந்த வைரஸ் தொற்றால் சுமார் 1,500 க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களை தனிமைப் படுத்தி கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறது.

மத்திய சுகாதாரத்துறை நேற்று வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 2,411 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 37,776 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,223 ஆக உயர்ந்துள்ளது. 10,018 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர். கொரோனா பாதிப்பால் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26,535 ஆக உயர்ந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

மரக்கறிச் சந்தை

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

இன்று (03/05/2020) தலைப்பு
மரக்கறிச் சந்தை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரைகள் பதினொன்றரைக் கோடி எண்ணிக்கை ஓடர்!

புதுடில்லி, மே03

11 கோடி 45 லட்சம் ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரைகளுக்கு இந்திய மத்திய அரசு 'ஓடர்' கொடுத்துள்ளது.

கொரோனா சிகிச்சைக்கு பயன்படும் மலேரிய தடுப்பு மருந்து ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரைகளுக்கு இரு நிறுவனங்களிடம் மத்திய அரசு ஓடர் கொடுத்துள்ளது.

அரசு நிறுவனமான 'இந்துஸ்தான் லேட்டக்ஸ் லிமிடெட்' இந்த மாத்திரைகளை கொள்முதல் செய்து அரசுக்கு வழங்கும். இதற்காக ஐபிசிஏ லேப்ஸ், சடைஸ் கடிலா என்ற இரு நிறுவனங்களிடம் மொத்தம் 11 கோடியே 45 லட்சம் மாத்திரைகளுக்கு ஹெச்எல்எல் ஓடர் கொடுத்துள்ளது.

ஓடர் கொடுத்ததில் ஏற்கனவே 6 கோடியே 64 லட்சம் மாத்திரைகள் வந்துள்ளன எனவுன், மீதி மாத்திரைகள் வரும் 16 ஆம் திகதிக்குள் கிடைத்து




விடும் என்றும் மத்திய அரசின் நலவாழ்வுத்துறை மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொரோனா சிகிச்சைக்கு பயன்படும் இந்த மாத்திரைகளால் பக்க விளைவுகள் ஏற்படும் என்பதால் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு இந்த மாத்திரைகள் பரிந்துரைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவத் தடுப்பு நடவடிக்கைகளில் இந்தியா தலைமைப் பொறுப்புக்கு உயர்வு

## அமெரிக்கா தரப்பில் பாராட்டு

வொஷிங்டன்,மே03

கொடிய கொரோனா நோய்க்கு எதிராக எடுத்த சிறப்பான நடவடிக்கைகளால், அவ்விடயத்தில் இந்தியா தலைமைப் பொறுப்புக்கு உயர்ந்துள்ளது என அமெரிக்கா பாராட்டி உள்ளது.

இந்திய - அமெரிக்க விவகாரங்களுக்கான, நாடாளுமன்றக் குழுவின் இணை தலைவரான ஜார்ஜ் ஹோல்டிங் எம்.பி. இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பவை வருமாறு: -

கொடிய கொரோனா நோய்க்கு எதிராக எடுத்த சிறப்பான நடவடிக்கைகளால், இந்தியா தலைமைப் பொறுப்புக்கு உயர்ந்துள்ளது. அமெரிக்கா - இந்தியா இடையிலான நட்பு, தனிச் சிறப்பு வாய்ந்தது. இது, தற்போதைய சூழலில் மேலும் வலுவடைந்துள்ளது.

இந்தியா, உள்நாட்டில் கொரோனாவை தடுக்கக் கடுமையாக போராடி வரும் நிலையிலும், அமெரிக்கா உள்ளிட்ட பிற நாடுகளுக்கு உதவி வருவது பாராட்டத்தக்கது. அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான இந்தியா, கொரோனா பரவலைத் தடுக்க, மருந்துகள், மருத்துவ உபகரணங்களை, அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேலும், அமெரிக்காவைச் சேர்ந்த, 1,500 பேரை பத்திரமாக விமானத்தில் அனுப்பி வைத்தது. இந்திய அரசு மட்டுமின்றி, அந்நாட்டைச் சேர்ந்த, சேவா இண்டர்நேஷனல் என்ற தொண்டு நிறுவனமும், அமெரிக்காவுக்கு லட்சக்கணக்கான முக கவசங்கள், மருந்துகள், உணவுப் பொட்டலங்களை வழங்கி வருகிறது. அமெரிக்காவில் வசிக்கும், இந்திய வம்சாவளியினர், ஏராளமான இந்திய மாணவர்கள் தங்க, இலவசமாக ஹோட்டல் அறைகளை அளித்துள்ளனர்.

இந்தியாவின் மகத்தான சேவைகள், 10 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அமெரிக்காவில் ஏற்படுத்தியுள்ள தாக்கம், வியக்க வைக்கிறது. சர்வதேச பிரச்சினையில், சமூக, கலாசார எல்லைகளை தாண்டி, இந்தியா ஆற்றிய பணியை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தினம் ஒரு தலைப்பு
# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்




படம் 1


படம் 2


படம் 3


படம் 4

**படம் 1**
பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**படம் 2**
றொபின்சன் ஷெர்வின் - தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு

**படம் 3**
எஸ். சீமா ஹானி - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

**படம் 4**
கணநாதன் டொஜிகா - தரம் 10
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**இந்த நான்கு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.**
**இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு - மரக்கறிச்சந்தை**

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'நீர்வீழ்ச்சி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

யதுஷி ரமேஷ் - தரம் 8
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ஜி. வர்சிகா - தரம் 3
வல்வை அமெரிக்கன்மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை

ஜி. பவித்திரன் - தரம் 8
யா/ ஹாட்லிக் கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எவ். ஸுமையா - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். ஐ. எவ். ஹுமைரா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். எவ். பஸ்லுல்லாஹ் - தரம் 7
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். நஸீம் - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

ஏ. எஸ். எவ். மனால் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

பிரபாகர் மயூரி - தரம் 7
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

பிரபாகர் அபிஜித் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

எம். சி. ஜோசுவா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

இ. பவிஷான் - தரம் 3
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

பி. பார்கவி - தரம் 6
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

நூரா மில்ஹான் - தரம் 5
அல் முன்னவர ஆரம்பப் பாடசாலை

செந்தூரன் அக்ஷயா - தரம் 6
யா/ மெதடிஸ்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிழை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

இ. சிந்தூரிகா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

# வீட்டுத்தோட்டத்தில் நீதியரசர் மும்முரம்












தமிழ்த் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், முன்னாள் நீதியரசருமான சி.வீ.விக்னேஸ்வரன் இந்த ஊரடங்கு வேளையில் என்ன செய்கின்றார் என்று தேடிப்பார்த்தோம்.

தமிழ் மக்களை வீட்டுத்தோட்டத்தில் குதியுங்கள் என்று அறிக்கை வெளியிட்ட அவர் மக்களுக்கு முன்மாதிரியாகத் தாம் நடந்து கொள்கின்றார்.

இந்த ஊரடங்கு சமயத்தில் அரசியல், ஆன்மீகநடவடிக்கைகள், வாசிப்பு போன்றவற்றைச் சுருக்கிக் கொண்டு வீட்டுத் தோட்டத்தில் முழு மூச்சாக அவர் இறங்கி விட்டார்.

யாழ்ப்பாணத்தில் நல்லூர், கோவில் வீதியில் உள்ள அவரது வீட்டுத்தோட்டம், வீட்டுத் தோட்டப் போட்டியில் முதலிடம் பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அத்தோட்டத்திற்கு சில காட்சிகள் மேலே...

## பிரதமர் நாளை கூட்டும் கூட்டத்தை ....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும், நாடாளுமன்றத்தை கூட்டுவதோ, பழைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் தேவைப்படாது என அரசாங்கமும் ஜனாதிபதியும் கடினமான நிலைப்பாட்டில் இருக்கின்றவேளையில், அரச மற்றும் அரசுக்கு ஆதரவளிக்கும் தனியார் ஊடகங்களைப் பாவித்து பெரிதாகப் பிரசாரம் செய்யப்படும். நிலைமை இவ்வாறிருக்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் அழைக்கும் பிரதமரின் தீர்மானத்தையிட்டு நாம் மகிழ்ச்சியடைந்தாலும், அரசாங்கத்தின் இரட்டை வேடத்தையிட்டு நாம் கவலையடைகிறோம்.

இந்த நிலைமையில், குறித்த சந்திப்பில் கலந்துகொள்வதற்கு நாங்கள் எண்ணவில்லை. இவ்வேளையில் மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைச் சாத்தியமான செயற்பாடு, முன்னாள் சபாநாயகரின் தலைமையில் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதேயாகும் என நாம் பொறுப்புணர்வுடன் மீண்டும் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

ஏனெனில், அரச நிதிச் செயற்பாடு மற்றும் உரிய சட்டங்களை நிறைவேற்றுதல் என்பன சம்பந்தமாக நாடாளுமன்றத்தினால் மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும் என்பதனாலேயாகும். - என்று உள்ளது.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# கொரோனா தனிமைப்படுத்தும் நிலையங்களை தமிழர் தாயகத்தில் தேடி வந்து அமைப்பது ஏன்?

## இன்னொரு திட்டமிட்ட இனவழிப்புக்கான ஏற்பாடா?

பனங்காட்டான்

நாடாளுமன்றத்தைமீளக்கூட்டவேண்டுமென்பதிலும், அடுத்த தேர்தலை எப்போது நடத்த வேண்டுமென்பதிலும் அக்கறை காட்டும் தமிழ்அரசியல்வாதிகள் கொரோனா கால நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன செய்கிறார்கள்? நோய்த் தடுப்பு நிலையங்களைத் தமிழர் தாயகத்தில் கோட்டாபய அரசு அமைப்பதை தடுத்து நிறுத்த இவர்கள் இதுவரை என்ன செய்தார்கள்? இவர்களுக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்த குற்றத்துக்காக மக்கள் தாமே தனித்து நின்று போராட வேண்டுமென்பது தலையெழுத்தா? இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொரோனா நோய் பற்றிய அறிவிப்பு வந்தபோது, சுமார் எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களையே இது தாக்குமெனவும் மரணத்தை விளைவிக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.இந்த வயதினரான மூத்தோருக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருக்குமென்பதாலும், இவர்கள் ஏற்கனவே வெவ்வேறு நோய்களுக்கு உட்பட்டவர்களாக இருக்கலாம் என்பதாலும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.இதனை நிரூபிப்பது போன்று இத்தாலியிலிருந்து கனடா வரை மரணித்தவர்களில் சுமார் நாற்பது வீதத்துக்கும் அதிகமானவர்கள் மூத்தோர்களாகவே அடையாளம் காணப்பட்டனர்.கனடாவைப் பொறுத்தளவில் ஒன்ராறியோ மற்றும் கியுபெக் மாகாணங்களில் முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வசித்தவர்களே இந்த மாகாணங்களின் மொத்த மரணங்களின் எண்ணிக்கையில் எழுபத்தியிரண்டு வீதமானவர்கள் என அறிவிக்கப்பட்டது. இந்த நிலையங்களில் அதிசிறப்பான நோயாளர் பராமரிப்பு மருத்துவ வசதியை ஏற்படுத்தவென கனடிய ராணுவத்தினர் இப்போது பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். எஞ்சியிருக்கும் மூத்தோர்களையாவது மரணத்திலிருந்து காப்பாற்ற இது வழிவகுக்கக் கூடும்.

அதேசமயம், சிறுவர் – இளையோர் – நடுத்தர வயதுக் குடும்பத்தினர் மரணங்களும் இப்போது பதியப்பட்டு வருகிறது. அண்மையில் வெளியான புள்ளி விவரம் ஒன்றின்படி கனடாவில் நோய்த் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்று வந்தவர்களில் 32 வீதமானோர் 35 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பது தெரியவந்தது.5 வயதுக் குழந்தையொன்றும் கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளாகி மரணமானது என்ற தகவல் எவராலும் நம்ப முடியாதிருந்தது.கடந்த சில நாள்களில் கொரோனா பரவல் சற்று சரிவு நிலைக்குச் சென்றுவிட்டதாக சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன. முன்னைய வாரங்களுடன் ஒப்பீடு செய்து பார்க்கையில் இவ்வாறு காணப்படலாம். ஆனால், எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு இந்நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகக் காணப்படவில்லை.ஏற்றமும் இறக்கமும் மாறி மாறிக் காணப்படுகிறது. கொரோனா ஏற்படுத்தியுள்ள எதிர்பாராத பாதிப்பு, சமூக மருத்துவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.அனேகமான வைத்தியசாலைகளில் பல சத்திரசிகிச்சைகள் நடைபெறவில்லை. நோய்த்தொற்று அச்சம் காரணமாக வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்வதைப் பலர் தவிர்த்துள்ளனர். இத

இடம்பெற்றுள்ளன.இருதயநோய், நீரிழிவு, புற்றுநோய், சிறுநீரக கோளாறு போன்றவைகளுக்கு சிகிச்சைபெற முடியாத கணிசமானோர் வைத்தியசாலைகளுக்குச் செல்லாது கடந்த சில வாரங்களில்



தங்கள் வாழ்விடங்களிலேயே இயற்கை மரணமடைந்துள்ளனர்.இந்தஎண்ணிக்கையைகொரோனாக் கால மரணங்கள் என்றே குறிப்பிட வேண்டும். இதனை எழுதும் வேளையில், உலகில் கொரோனா தொற்றாளர்களின்எண்ணிக்கைமூன்றுமில்லியனைத் தாண்டிவிட்டது. இதில் மூன்றிலொரு பங்கினர் அமெரிக்கர்கள்.உலகில் மரணித்தோர்களில் அமெரிக்கர்கள் நான்கிலொரு பங்குக்கும் அதிகமானோர். சுமார் எழுபதினாயிரம் அமெரிக்கர்கள் இந்நோயால் மரணிக்கக் கூடுமென ஜனாதிபதி ட்ரம்ப் எதிர்வு கூறியுள்ளார். ஆனால், இந்த எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டலாமென மருத்துவ வட்டாரங்கள் கணிப்பிட்டுள்ளனநியுயோர்க் நகரத்திலுள்ள புறூக்லின் பிரதேசத்திலுள்ள இறுதிச் சடங்கு கட்டிடமொன்றுக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐந்துக் கும் மேற்பட்ட பாரஊர்திகளில் எண்ணுக் கணக் கற்ற உருக்குலைந்த சடலங்கள் இந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டு அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இம்மரணங்கள் கொரோனாவினால் ஏற்பட்டவையென்று கூறப்படுகிறது. நிலைமை இப்படியிருக்கையில், சில நாடுகள் பொருளாதார சீரடைவை ஏற்படுத்துவதற்காக படிப்படியாக நிலைமையை வழமைக்குக் கொண்டு



வர முனைப்புக் காட்டுகின்றன. இதற்கென மே மாதத்தை இவர்கள் தெரிவு செய்துள்ளனர்.அவசரப்பட்டு எடுக்கப்படும் இம்முடிவினால் கொரோனா தனது இரண்டாம் சுற்றை ஆரம்பிக்க வசதியாகலாமென மருத்துவ மற்றும் பாதுகாப்புத் துறையினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.இலங்கையில் இதனை எழுதும் வேளையில் நோய்த் தொற்றுள்ளோர் எண்ணிக்கை எழுநூறைத்தாண்டியுள்ளது. கொழும்பு,

கடந்த சில வாரங்களாக முற்றாக முடக்கப்பட்டுள்ளன.தமிழரின் கலாசார தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணத்தில் மார்ச் மாதம் 16ஆம் திகதி முதல் ஊரடங்குச் சட்டம் மாறி மாறியும், சிலசமயம் பகல் வேளையில்நீக்கப்பட்டும்அமுல்செய்யப்படுகிறது.

சுவிஸிலிருந்து அங்கு சென்ற ஒரு போதகரால் பரப்பப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டு நாற்பது நாள்களைக் கடந்துவிட்ட நிலையில், இங்கு நோயால் அவதியுறும் மக்களைவிட பசியால் வாடும் மக்களே அதிகமென கூறப்படுகிறது. புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பு அங்கிருந்து பல வழிகளால் தெரிவிக்கப்படுகிறது.தென்னிலங்கையில் நோய்த் தொற்றுக்குள்ளானவர்களை தனிமைப்படுத்துவதற்கான நிலையங்களை தமிழர் தாயகத்தில் படையினர் அமைத்து வருகின்றனர். பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ன, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஆகியோர் நேரடியாகவடக்குக்குச்சென்றுஅதற்கான இடங்களை அடையாளம் காட்டியுள்ளனர்.ஆரம்பத்தில் பலாலி ராணுவ முகாமுக்குள் இதனை அமைத்தது கோட்டாபய அரசு. பின்னர் இளவாலையில் மூன்று பாடசாலைகளை இராணுவம் கைப்பற்றியது.கோப்பாயில் கல்வி நிலைய கட்டிடமொன்றைக் கைப்பற்ற படைத்தரப்பு முயற்சித்தபோது பொதுமக்கள் துணிச்சலாக எதிர்த்து நின்று அதனை முறியடித்தனர். ஆனால், முல்லைத்தீவில் வற்றாப்பளையில் பாடசாலைக் கட்டிடமொன்றை பெற்றோர் பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி ராணுவம் கைப்பற்றியுள்ளது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகத்தின் சில கட்டிடங்கள் போன்றவற்றையும் நோய்த்தடுப்பு நிலையங்களாக்க படையினர் முயன்று வருகின்றனர்.இராணுவம், கடற்படை, வான்படை ஆகியவைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். ஆனால், சில நூற்றுக்கணக்கானோரே நோய்க்குள்ளாகினர் எனப் பொய்யான தகவலை வெளியிடும் ஆட்சித்தரப்பு அவர்களை தமிழர் தாயகத்துக்கு அனுப்பி வைக்கிறது.

தாயகத் தமிழர் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்தி சமூகப் பரவலை தடுத்து வருவதைப் பொறுக்க முடியாத சிங்கள ஆட்சிபீடம் இந்தப் பிரதேசங்களை கொரோனா நோய்ப் பிரதேசங்களாக மாற்றுவதற்காகவே இங்கு இதற்கான நிலையங்களை அமைக்கின்றது போலும்.காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற பல பிரதேசங்கள் தெற்கில் இருக்கும்போது இதற்கான நிலையங்களை தமிழர் தாயகத்தில் ஏன் அமைக்கிறார்கள்?மிகத் தந்திரமான முறையில் இன அழிப்பை ஏற்படுத்தும் திட்டமாக கோட்டாபய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை எத்தனை நாள்களுக்கு பொதுமக்களால் தனித்து நின்று தடுக்க முடியும்?பொதுத் தேர்தல் பற்றியும், நாடாளுமன்றத்தைக் கூட்டுவது பற்றியும், சிங்கள அரசியல்வாதிகளை நீதிமன்றத்தில் பிணை எடுப்பது பற்றியும் அக்கறை காட்டும் தமிழ் அரசியல் தலைவர்கள் தங்கள் மண்ணை கொரோனாவுக்கு இரையாக்கும் சிங்கள ஆட்சியாளர் செயலையிட்டு மௌனம்

“நாடாளுமன்றத்தை மீளக்கூட்ட வேண்டு மென்பதிலும், அடுத்த தேர்தலை எப்போது நடத்த வேண்டுமென்பதிலும் அக்கறை காட்டும் தமிழ்அரசியல்வாதிகள் கொரோனா கால நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன செய்கிறார்கள்? நோய்த் தடுப்பு நிலையங்களைத் தமிழர் தாயகத்தில் கோட்டாபய அரசு அமைப்பதை தடுத்து நிறுத்த இவர்கள் இதுவரை என்ன செய்தார்கள்?”

சாதிப்பது ஏன்?ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டுமென அறிக்கை விடும் தமிழ் அரசியல்வாதிகள் தாமாக முன்வந்து தனிப்பட்ட முறையில் என்ன உதவியைப் புரிந்தார்கள்? இந்தியாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்து ஜனாதிபதிவரை அனைவரும் தங்கள் மாத ஊதியத்தில் முப்பது வீதத்தை கொரோனா நிவாரணத்துக்கு வழங்கியுள்ளனர்.

இந்தியாவிலுள்ள அரசாங்க ஊழியர்கள் தங்கள் ஒரு நாள் ஊதியத்தை இதற்கு வழங்கியுள்ளனர். இலங்கையிலும் அரச ஊழியர்களின் சம்பளத்தில் ஒரு நாள் பங்கு இதற்கென எடுக்கப்பட்டுள்ளது.

# அன்னை மரியாவுக்கான இந்த மே மாதத்தில் வீட்டில் இருந்தபடி செபமாலை செபியுங்கள்

## திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு

கொரோனா தொற்றால் வீடுகளிலே தங்கியிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி அன்னை மரியாவுக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள மே மாதத்தில் இல்லங்களில் செபமாலை செபியுங்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

உலகின் அனைத்து கத்தோலிக்க மக்களுக்குமென 25 ஏப்ரல் 2020 அன்று வெளியிட்டுள்ள மடல் ஒன்றிலேயே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்படி வேண்டு கோளை விடுத்துள்ளார். அம்மடலில் கொரோனாத் தொற்றுக் கிருமி பரவல் விதிமுறைகளால் வீடுகளிலே தங்கியிருக்கும் நாம் கிடைக்கின்ற வாய்ப்பை அதிகம் பயன்படுத்தி, ஆரம்பிக்கின்ற இந்த மே மாதத்தில் இல்லங்களில் செபமாலை செபிப்பதன் அழகை மீண்டும் கண்டுணர்வோம் என்று கூறியுள்ளார்.

மே மாதத்தில் இறைமக்கள் அனைவரும் அன்னை மரியா மீது தங்களுக்குள்ள ஆழ்ந்த அன்பையும் பக்தியையும் சிறப்பாக வெளிப்படுத்தும் விதமாக செபமாலை செபித்து வருகின்றனர் என்று கூறியுள்ள திருத்தந்தை, இந்தக் கொள்ளை நோய்க் காலத்தில் சூழ்நிலைக்கேற்ப தனியாக அல்லது சேர்ந்து செபமாலை செபிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

செபமாலை செபிப்பதற்கு வலைத்தளத்திலும்கூட நல்ல வழிமுறைகள் உள்ளன என்று கூறியுள்ள திருத்தந்தை செபமாலையின் முடிவில் அன்னை மரியாவை நோக்கிச் செபிப்பதற்கு உதவியாக இரு செபங்களையும் விசுவாசிகளுக்கென வழங்கியுள்ளோம். நானும் வருகிற மே மாதத்தில் உங்களோடு ஆன்மீக முறையில் இணைந்து இச்செபங்களை செபிப்பேன் என்றும் கூறியுள்ளார்.

நம் அன்னையாம் மரியாவின் இதயத்தோடு இணைந்து கிறிஸ்துவின் திருமுகத்தை தியானிக்கும்போது அது ஒரே ஆன்மீகக் குடும்பமாக அதிகமாக நம்மை இன்னும் ஒன்றிணைக்கும். அதேவேளை இப்போது நாம் எதிர்கொள்ளும் சோதனையை வெல் வதற்கு உதவும் என்றும் திருத்தந்தை தம் மடலில் குறிப்பிட்டுள்ளார்.

நானும் உங்களுக்காக குறிப்பாக மிகவும் துன்புறும் மக்களுக்காக சிறப் பாகச் செபிக்கின்றேன். எனக்காகவும் செபியுங்கள். உங்கள் எல்லாருக்கும் நன்றியும் ஆசீரும். – என இம்மடலை நிறைவு செய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.



செபமாலையின் முடிவில் அன்னை மரியாவை நோக்கிச் செபிப்பதற்கு உதவியாக திருத்தந்தை வெளியிட்ட இரு செபங்களையும் செபிப்போம்.

### முதல் செபம்

மிகவும் இரக்கமுள்ள தாயே! உமது அடைக்கலமாக ஓடிவந்து உம்முடைய உபகார சகாயங்களை இறைஞ்சி மன்றாடிக் கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்று நினைத்தருளும். கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே! தயையுள்ள தாயே! இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை அண்டி வந்திருக்கிறோம். பெருமூச்செறிந்து அழுது பாவிகளாயிருக்கிற நாங்கள் உமது தயாபரத்தில் காத்து நிற்கின்றோம். அவதரித்த வார்த்தையின் தாயே, எங்கள் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரியாய் கேட்டுத் தந்தருளும் தாயே ஆமென்

### இரண்டாவது செபம்

ஓ மரியே! மீட்பின் மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக நீர் எப்போதும்எம்பாதையில்சுடர்விடுகின்றீர். நோயாளிகளின் நலவாழ்வை உம்மிடம் அர்ப்பணிக்கின்றோம்.

சிலுவை யடியில் இயேசுவின் பாடுகளோடு உம்மை இணைத்துக்கொண்டீர். உமது விசுவாசத்தைக் காத்தீர். உரோம் மக்களின் மீட்பரே! தாயே! எமது தேவை என்னவென்று உமக்குத் தெரியும். இறையன்பு அன்னையே! எமக்கு உதவியருளும். சோதனை துன்ப வேளைகளில் எம் மன்றாட்டை புறக்கணியாதேயும். எம்மை எல்லாவித ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றும், மகிமையுள்ள கன்னியே! பேறுபெற்றவரே!ஆமென்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

## இறைவா உமது கரங்களாலேயே இந்த தொற்றுநோயை நிறுத்தும்!

### வேண்டுகின்றார் திருத்தந்தை

இறைவா! உமது கரங்களால் இந்த தொற்றுநோயை நிறுத்தும் என்று இறைவனிடம் வேண்டினேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தாலிய நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறினார். கொரோனா தொற்றுக்கிருமியின் நெருக்கடி நம்மை இல்லங்களிலேயே தங்கும்படி செய்துள்ள வேளையில் நம் ஒவ்வொரு நாள் வாழ்வில் நம் குடும்பங்களில் இதுவரைக் காண இயலாமல் போன சிறு சிறு கருவூலங்களைக் காண, இதை ஒரு வாய்ப்பாக கருத வேண்டும் என்று திருத்தந்தை தன் பேட்டியில் சுட்டிக்காட்டினார்

# தொழிலுக்கும் தொழிலாளருக்கும் உரிய மதிப்பு மே தினத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு

தொழிலாளரான புனித யோசேப்பின் திருநாளன்று தொழிலாளர்கள் யாரும் தங்கள் வேலைகளை இழந்துவிடாமல் இருக்கவும் அவர்களுக்கு தகுதியான ஊதியமும் தகுந்த மதிப்பும் ஓய்வும் வழங்கப்படவேண்டும் என்றும் செபிப்போம் என்றார் திருத்தந்தை.

திருத்தந்தை தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தில் அமைந்துள்ள தூய ஆவியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிற்றாலயத்தில் புனித யோசேப்பு திருநாளையொட்டி தொழிலாளராக உருவமைக்கப்பட்டுள்ள புனித யோசேப்பு திருஉருவம் பீடத்திற்கருகே வைக்கப்பட்டிருந்தது.

தச்சு வேலை செய்பவருக்குரிய கருவிகளை கரங்களில் ஏந்தியிருக்கும் புனித யோசேப்பு திரு உருவத்தை இத்தாலியத் தொழிலாளர்களின் கிறிஸ்தவக் கழகம் இத்திருநாளன்று சிற்றாலயத்தில் நிறுவியிருக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்திருநாள் திருப்பலியின் துவக்கத்தில் தொழிலாளர்கள் உலகை நோக்கி தன் எண்ணங்களைத் திருப்பினார்.



தொழிலாளரான புனித யோசேப்பின் திருநாளன்று தொழிலாளர்கள் அனைவருக்காகவும் செபிக்கிறோம் என்றும் அவர்களில் யாரும் தங்கள் வேலைகளை இழந்துவிடாமல் இருக்கவும் அவர்களுக்கு தகுதியான ஊதியமும் தகுந்த மதிப்பும் ஓய்வும் வழங்கப்படவேண்டும் என்றும் செபிப்போம் என்று திருத்தந்தை இத்திருப்பலியின் துவக்கத்தில் கூறினார்.

தொழில் செய்வது மனிதருக்கு வழங்கப்பட்டுள்ள அழைப்பு என்று எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொழில் வழியே கடவுளின் படைப்புத் தொழிலில் மனிதர்கள் பங்கேற்கின்றனர் என்பதையும், அதனால், தொழில்கள் மதிப்பு பெறுகின்றன என்பதையும் வலியுறுத்திக் கூறினார். இன்றைய உலகில் ஊதியங்கள் ஒருவேளை கூடுதலாகக் கிடைக்கலாம். ஆனால் தொழிலாளர்கள் 8,12,14 மணி நேரங்கள் உழைக்கவேண்டியுள்ளமையையும், அவர்கள் ஆற்றும் தொழிலுக்கு மதிப்பு வழங்கப்படாமல் இருக்கின்றமையையும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

தன் மறையுரையின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட ஓர் உரிமையாளரின் உயர்ந்த உள்ளத்தை குறிப்பிட்டுப் பேசினார். அந்த உரிமையாளர் தன்னிடம் பணியாற்றும் எவரையும் வேலை நீக்கம் செய்யத் தயங்கினார் என்றும், ஒருவரைப் பணிநீக்கம் செய்வது, தன்னையே பணிநீக்கம் செய்வதைப் போல் அவர் உணர்ந்தார் என்றும் குறிப்பிட்டு, அத்தகைய மனசாட்சியுடன் செயலாற்றும் உரிமையாளர்கள் இன்றைய சூழலுக்கி மிகவும் தேவை என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

பீடத்தருகே வைக்கப்பட்டிருந்த புனித யோசேப்பு திரு உருவத்தைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொழிலுக்கு மிகுந்த மதிப்பு தந்த புனித யோசேப்பின் பரிந்துரையோடு தொழிலுக்கும் தொழிலாளருக்கும் உரிய மதிப்பு இவ்வுலகில் கிடைக்க நாம் அனைவருமே உழைக்கும் வரத்திற்காக செபிப்போம் என்று கூறி தன் மறையுரையை நிறைவு செய்தார்.

# கடற்படையினருக்குள் 296 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே. 03

கடற்படையைச் சேர்ந்த 296 பேர், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும், இவர்களில் 217 பேர் வெலிசற கடற்படை முகாமைச் சேர்ந்தவர்கள் எனவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கடற்படையைச் சேர்ந்த 296 பேர், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும், இவர்களில் 217 பேர் வெலிசற கடற்படை முகாமைச் சேர்ந்தவர்கள் எனவும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளாகிய 25 பேர் நேற்று முன் தினம் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில், 18 பேர் வெலிசற கடற்படை முகாமைச் சேர்ந்தவர்கள். கொரோனா தொற்றுக்குள்ளான கடற்படையினருடன் நெருங்கிப் பழகிய 5 பேரும், நேற்று தொற்றுக்குள்ளானதாக இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறு இனங்காணப்பட்டவர்களில், நால்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் கொவிட் 19 தொற்றுக்குள்ளான 160 பேர் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனரென தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், அதி இடர் வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள களுத்துறை மாவட்டத்தில் 65 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 53 பேரும் புத்தளம் மாவட்டத்தில் 41 பேரும் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர்.

# புதுக்குடியிருப்பில் தோண்டியபோது பொலிஸாரிடம் சிக்கிய வெடிபொருள்

முல்லைத்தீவு, மே. 03

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் உள்ள சுனாமி நினைவாலயத்துக்கு முன்னால் உள்ள வீதி ஓரத்தில், போர்க் காலத்தில் வெடிபொருட்கள் புதைக்கப்பட்ட இடம் நேற்றுப் பொலிசாரால் தோண்டப்பட்டது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அந்தப் பகுதி நேற்று காலை சிறப்பு அதிரடிப்படையினரால் பைக்கோ இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டது.

இதன்போது போர்க் காலத்தில் புதைக்கப்பட்ட மூன்று ஆர்.பி.ஜி. எறிகணைகள் உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள் சிறப்பு அதிரடிப்படையினரால் தகர்த்து அழிக்கப்படவுள்ளதாக புதுக்குடியிருப்புப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.



# கொரோனா தனிமை...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மாதமொன்றுக்கு ஒரு லட்சத்துக்கும் அதிக மான ஊதியம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்ன பங்களிப்பு செய்தனர்? மாகாண சபை உறுப்பினர்களாக இருந்தவர்கள், பிரதேச சபை உறுப்பினர்களாக இருப்பவர்கள் தாங்கள் பெற்ற, பெறுகின்ற ஊதியத்தில் தமக்கு வாக்களித்த மக்களுக்கு எத்தனை வீதத்தை வழங்கியுள்ளார்கள்? நோய்த்தடுப்பு நிலையங்களைத் திறக்கவிடாது தடுக்கும் மக்களின் கூட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகள் ஒருவரைக்கூட காணவில்லையே. மக்களை மறந்து விட்டு நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறும், தேர்தலை பின்போடுமாறும் கோமிடும் இவர்களின் கோரிக்கையை கோட்டாபய ராஜபக்ஷ மறுத்துவிட்டார். இனியென்ன செய்யப் போகிறார்கள்? நீதிமன்றப்படி ஏறப்போகிறார்களா? மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு என்ன நடைபெற்றதென்பதை நினைத்துப் பார்த்தால் நீதித்துறையின் புனிதத்தைத் தெரிந்து கொள்ளலாம். ஊடக அறிக்கைகள் வாயிலாகவும், நீதிமன்றப் படியேற்றங்கள் வாயிலாகவும், ஏட்டிக்குப் போட்டி அர்ச்சனை வாயிலாகவும் அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகள் நிகழ்கால அவசியத் தேவையை உணர்ந்து, நாளாந்த வாழ்க்கைக்கு கொரோனாவோடு போராடும் மக்களுக்காகப் பணியாற்ற முன்வர வேண்டும். ஐந்தாண்டுக்கு ஒரு தடவை தமக்கு வாக்களிப்பவர்களை, ஐந்தாண்டுக்கு ஒரு தடவை சந்தித்தால் போதுமென்று எண்ணுகிறார்களா? கொரோனாவை மையப்படுத்தி இன்னொரு திட்டமிட்ட இனவழிப்பை சிங்கள அரசு மேற்கொள்வதை தடுப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகள் எப்போது முன்வரப்போகிறார்கள்?


சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும்
## நெருக்கடியான சூழலில் பாதுகாக்க வேண்டும்

**இன்று சர்வதேச ஊடக சுதந்திர தினம். அதனை ஒட்டி இலங்கை மக்கள் இதழியல் இயக்கம் சார்பில் அதன் தலைவர் தேவநாயகம் தேவானந்த் வரைந்த கட்டுரை இது.**

தே.தேவானந்த்

உலகம் முழுமையும் கொரோனா வைரஸ் (covid - 19) தொற்றுநோயால் கவலை, துயரம் மற்றும் நிச்சயமற்ற நிலையில் சிக்கியுள்ள இந்த நேரத்தில், அனைத்துத்துறைகளும் தமது எதிர்காலத்தை மாற்றி யோசிக்க வேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமை ஊடகப் பணியையும்




சற்று மாற்றி யோசிக்க வைத்திருக்கிறது. ஊடகத்துறை என்றுமில்லாத அளவிற்கு விமர்சனங்களுக்கும், அழுத்தங்களுக்கும் உள்ளாகியிருக்கிறது.

இடர்மிகுந்த இந்த நெருக்கடியை எதிர்கொள்ள, புரிந்துகொள்ள, சிந்திக்க மற்றும் சமாளிக்க இன்று உலகிற்கு இலவசத் தகவல் அவசியமாகிறது. இந்தத் தகவல்களை பட்டிதொட்டி எங்கும் கொண்டு செல்லும் மகத்தான பணியைச் செய்தாக வேண்டியிருக்கிறது.

நெருக்கடி மிகுந்த இந்தச் சூழ்நிலையில் தகவல் பரிமாற்றங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. பொது மக்களுக்கு சரியான, உண்மையான தகவல்களை வழங்குவதே நோயை எதிர்த்துப் போராடுவதற்கான வழியாகும். ஆனால், இந்த நெருக்கடியான சூழலில் வதந்திகள் மற்றும் தவறான தகவல்கள் அதிகளவில் பகிரப்படுகின்றன. அதனால் தொற்றுநோய் அதிகரிக்கிறது மற்றும் உயிர்களை ஆபத்தில் ஆழ்த்துகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசுகள் அதிகளவு அதிகாரத்தைக் கையிலெடுத்து ஊடகங்கள் மீதான அழுத்தத்தை பிரயோகிக்கின்றன, அடக்குமுறையை நடைமுறைப்படுத்துகின்றன. இதனால் எதிர்காலத்தில் ஏதேச்சதிகாரமான அரசுகளின் எழுச்சிகள் இலகுவாக நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்பதையும் மனங்கொள்ள வேண்டும். இந்தச் சிக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதும் மக்கள் நலன்சார்ந்த இதழியலை நோக்கி நகரவேண்டியதும் இதழியல்துறையின் பொறுப்பாக உள்ளது.

### 1. ஊடக சுதந்திர தினம்

ஒவ்வொரு வருடமும் பன்னாட்டு ஊடக சுதந்திர தினம் மே 3 ஆம் திகதி கொண்டாடப்படுவது வழமை. இந்த ஆண்டு அதற்கான வாய்ப்புக்கள் கொரோனோ வைரஸ் நோய் தொற்றுக் காரணமாக தவிர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பேரிடர்காலத்தில் ஊடகங்களின் பணிபற்றிய ஒன்லைன் விவாதங்கள் இந்த ஆண்டு அதிகளவில் நடக்கின்றன, நடக்கும்.

யுனெஸ்கோ நிறுவனம் இந்தாண்டு ஊடக சுதந்திர தினத்துக்கான கருப்பொருளாக அச்சமோ பக்க சார்போ இல்லாத ஊடகம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறது. இந்த ஆண்டிற்கான துணை கருப்பொருள்களாக, ஆண், பெண் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு, அரசியல் மற்றும் வணிக செல்வாக்கிலிருந்து சுதந்திரமான ஊடகம், தொழில்முறை பத்திரிகை மற்றும் ஊடகத்தின் அனைத்து அம்சங்களிலும் பாலின சமத்துவம் பேணப்படுவது போன்ற விடயங்களை முன்வைக்கிறது.

### 2. ஊடகத்துறையில் அரியல் தலையீடு

ஊடகத்துறையில் அரசியல் தலையீடு அதிகரித்து வருவதைக்காணமுடிகிறது. ஊடக நிறுவனங்கள் பல அரசில்வாதிகளின் கைகளுக்கு மாற்றப்பட்டது மற்றும் அரசியல்வாதிகளே தமது சொந்த ஊடகங்களை உருவாக்கிக் கொண்டது போன்ற காரணங்களால் இந்த நிலைமை அதிகரிக்கிறது. இலங்கையிலும் இந்த நிலைமையை அவதானிக்கலாம். இலங்கையைப் பொறுத்த வரையில் பிராந்தியப் பத்திரிகைகளின் மையமாக விளங்குகின்ற வடக்கில், ஊடகங்களில் அரசியல் தலையீடு என்ற நிலைமை அதிகரிப்பதை அவதானிக்க முடிகிறது. தனிநபர் புகழ்பாடுதல், தனிநபர் நலன்சார்ந்து சில பத்திரிகைகள் இயங்கத் தலைப்படுகின்றன. இதே போன்று கருத்தியல் ஆதிக்கமும் ஊடகத்துறைமீது திணிக்கப்படுகின்றது. இதில் அரசு சார்பு, அரச எதிர்ப்பு என்ற இரு நிலைப்பாடுகள் முனைப்புப்பெறுகின்றன. இதனால் எதிரும் புதிருமான தகவல்கள் பகிரப்படுகின்றன. மக்கள் குழப்பத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இந்தச் சூழலில் அரசியல் அழுத்தங்கள் அற்ற ஊட




### 3. ஊடகங்களின் பொருளாதார நெருக்கடி

கொரொனோ வைரஸ் நோய்தொற்றுக் காரணமாக ஊடக நிறுவனங்கள் – குறிப்பாக பத்திரிகைகள் – பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றன. பெருவணிக நிறுவனங்களின் விளம்பரங்கள் கிடைக்கப்பெறாமை காரணமாக அதில் தங்கியிருந்த ஊடகத்துறை நெருக்கடியைச் சந்திக்கின்றது. இன்றைய சூழலில் பத்திரிகைகள் பாரியளவு விற்பனை வீழ்ச்சியைச்சந்தித்துள்ளன. இது மெல்லக் குறைந்து வரும் வாசகர் எண்ணிக்கை வீழ்ச்சியைத் திடீரென அதிகப்படுத்தும். குறிப்பாக கொரோனோ வைரஸ் காரணமாக ஊரடங்குச் சட்டம், நடமாட்டத்திற்கான மட்டுப்பாடுகள் காரணமாக பத்திகைகள் வாசகர்களிடம் சென்று சேர்வதில்லை. இதனால் பத்திரிகை வாசிப் புப்பழக்கம் அரிதாகிவிடலாம். பல பத்திரிகைகள் பக்கங்களைக் குறைத்துள்ளன, தமது இணைப் பதிப்புக்களை இடைநிறுத்தியுள்ளன. அதே வேளை தினப்பத்திரிகை இலத்திரனியல் வடிவத்திற்கு மாற றப்பட்டிருக்கிறது. ஈ. பத்திரிகைகளின் பாவனை அதிகரித்திருப்பதையும் இதிலும் இலவச ஈ.பத்திரிகைகளின் பாவனை அதிகரித்திருப்பதும் அவதானிக்கப்படுகின்றது. இது நோய்த் தொற்றின் பயனான சாதகமான விடயமாக இருந்தாலும் பத்திரிகைத் துறக்கான மேலதிக சுமையாகவே இருக்கின்றது. எதிர்காலத்தில் இந்த ஈ.பத்திரிகைகளை வருமானமீட்டத்துறையாக மாற்ற வேண்டிய பணி சவாலானதாக இருக்கும். இருப்பினும் மாறிவரும் சமூகப்பழக்கத்தின் ஒரு பகுதியாக இலத்திரனியல் வடிவத்திற்கு ஊடகத்துறை மாறியாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அதற்கேற்றதாக ஆளணி உருவாக்கம் நடைபெற வேண்டும்.

### 4. அவதூறுச் செய்திகள்

இடர்மிகுந்த காலத்தில் ஊடகங்களில் தனிநபர் உரிமை மீறல்கள் அதிகளவில் நடைபெறுகின்றமையை இனங்காண முடிகிறது. கொரோனோ வைரஸ் தொற்றுக்காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் பகிரங்கப்படுத்தப்படும் போது தனிமனித உரிமைகள் பேணப்படவில்லை என்பது பலரது குற்றச்சாட்டாகவுள்ளது. மேலும், நோய் தொற்றுக்குள்ளானவர்களின் விவரங்கள் பகிரங்கப்படுத்தப்படுவதால் பாதிக்கப்பட்டவர்சார்ந்த குடும்பங்கள் நெருக்கடிக்காளாகின்றன. நோயைப்பரப்பினார்கள் என்று தனிநபர்கள் இழிவுபடுத்தும் நோக்கம் கொண்ட அவதூறு செய்திகள் அதிகளவில் ஊடகங்களில் பகிரப்படுகின்றன, அவர்கள் மீதானதாக்குதல்கள் அல்லது துன்புறுத்தல் அபாயங்கள் நீடிக்கின்றன. இந்தப் போக்குஅதிகரித்துச்செல்வதையும் காண முடிகின்றது. தமிழ் ஊடகப்பரப்பில் தனிநபர்களை அவதூறுப்படுத்தும் தாக்குதல்கள் தொடர்கதையாகத் தொடர்வதை அவதானிக்கலாம். பல்கலைக்கழக ஊடகத்துறை விரிவுரையாளர் தொடக்கம் ஊடகவியலாளர்கள், சமூகஊடக தகவல் பகிர்வாளர்களுக்கெதிராக இதுவிடயமான



# ஊடகங்களையும்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் முறைப்பாடுகள் கடந்த காலத்தில் பதியப்பட்டுள்ளமை வேதனை தருகின்றது. தனிநபர் அவதூறு முறைப்பாட்டுக்கான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கான போதிய சட்டங்கள் இல்லாமை அவர்கள் தப்பிக்க வசதியாக அமைகின்றன. மற்றும் இவ்வாறான விடயங்களை கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப பற்றாக்குறைகள் காரணமாக இழிவுபடுத்தல் பணிகள் தொடர்கின்றன. இதற்கான தகுந்த சட்டங்களும் தொழில்நுட்பங்களும் இலங்கையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சட்டத்தை நாடுவதற்கான நட்புரீதியான அணுகுமுறைகள்வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்காக சிவில் சமூப்பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

### 5. ஊடகத்துறையில் பால்நிலை சமத்துவம்

ஊடகத்துறையில் பால்நிலை சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பது நீண்டகாலக் கோரிக்கையாக நீடிக்கிறது. களத்தில் பெண்ஊடகவியலாளர்களின் எண்ணிக்க போதியளவில் இல்லை என்பது கவலையளிக்கின்றது. பணியில் இருக்கின்ற ஒருசில பெண் ஊடகவியலாளர்களும் தாம் ஆணாதிக்கத்தில் உள்ள ஊடகத்துறையில் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடுவதாகக் குறிப்பிடுகிறார்கள். பெண் ஊடகவியலாளர்கள் மீதான அழுத்தங்கள் தற்போதைய சூழ்நிலைகளில் மோசமாகிறது. பெண் ஊடகவிலாளர்களைப் பாதுகாப்பதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் ஏற்றதான கொள்கைத் திடடமிடல்கள் ஊடக நிறுவனங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும். பால்நிலை சமத்துவதைப் பேணுவதற்கு ஊடகத்துறை அதிகளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

### 6. ஊடகவியலாளர்களின் பொருளாதாரம்

கொரோனோ வைரஸ் நோய் தொற்று நெருக்கடியான சூழலில் ஊடகவியலாளர்களுக்கு பொருளாதார நிச்சயமற்ற தன்மை அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. பெரும்பாலும் ஊடகத்துறையில் களநிலைப்பணியாளர்கள் தினக்கூலிகளாகவே பணியாற்றுகிறார்கள். இதனால் தற்போதைய சூழலில் வருவாயின்றி நெருக்கடியான சூழலில் வாழ்கிறார்கள். இவர்கள் கவனிக்கப்பட வில்லை. வறுமையில் வாடுகிறார்கள். இவர்களுக்கான பாதுகாப்பான தொழில் வழிகாட்டல் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக ஊடக நிறுவனங்கள் தமது பணியாளர்களை பணியிலிருந்து முன்னறிவித்தலின்றி தூக்கியெறிய ஆரம்பித்திருக்கின்றன. இது தொழில் பாதுகாப்பு நடை முறை இல்லாத காரணத்தால் சாத்தியமாகிறது. ஊடகவியலாளர்கள் பலர் திடீரெனப் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகிறார்கள். இதனைத் தவிர்ப்பதற்கு தொழில்பாதுகாப்பு கோட்பாடு வரையறுக்கப்பட வேண்டும். ஊடகவியலாளர்களுக்கான கொடுப்பனவுப் பட்டியலும் தயார் படுத்தப்பட வேண்டும். ஊடகத்துறை தனித் தொழிலாக அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவுப்பட்டியல் தயாரிக்கப்படுவதை வலயுறுத்திய 2019 ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழ் இதழியல் மகாநாட்டின் தீர்மானங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

### 7. பத்திரிகைகளின் எதிர்காலம்

இன்று,டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கான வேகமான கட்டாய மாற்றம் காரணமாக,வருவாய் குறைந்து வருகிறது அல்லது வீழ்ச்சியடைகிறது. இறுதியில், செய்தித்தாள்கள் செயல்பாட்டைக் குறைக்கவோ அல்லது நிறுத்தவோ கட்டாயப்படுத்தப்படலாம். இலங்கை வடபகுதி பிராந்தியப்பத்திரிகைகள் சில நிறுத்தப்படலாம். இந்தச் சூழ்திலையை எதிர்கொள்வதற்கான நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட வேண்டும். இதற்காக நிபுணத்துவக் குழுவை நியமித்து




ஆய்வுகளை உடனடியாக ஆரம்பித்தாக வேண்டும்.

### 8. மதநல்லிணக்கத்திற்கான பணி

கொரோனோ வைரஸ் தொற்று இலங்கையைப் பொறுத்தவரையில் பல சவால்களை கொடுத்துள்ளது. இந்தக்காலகட்டத்தில் மத நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையிலான தகவல்கள் பரப்பப்படுகின்றன. மதங்களை நிந்தனை செய்யும் போக்கு அதிகரித்துள்ளது. வைரஸ் தொற்றையும் மதத்தையும் தொடர்புபடுத்தும் போக்கு அதிகரித்துள்ளது. மத வைபவங்களால் கொரோனா பரப்பப்படடதான பிம்பம் உருவாக்கப்பட்டு, குறித்த சில மத அமைப்புக்களுக்கெதிரான விரோதம் ஊடகங்களால் வளர்க்கப்படுகின்றது. இது ஒரு எதிர்க்கருத்தியல்யுத்தமாகத் தொடர்கிறது. அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்பட்ட சர்வமத அமைப்புக்கள் மத நல்லிணக்க அமைப்புக்களின் செயல்திறன் பற்றாக்குறை இது விடயத்தில் காத்திரமான நடவடிக்கையைத் தவறவிடுகிறது. மதநல்லிணக்கத்திற்காக

> நெருக்கடி மிகுந்த இந்தச் சூழ்நிலையில் தகவல் பரிமாற்றங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. பொது மக்களுக்கு சரியான, உண்மையான தகவல்களை வழங்குவதே நோயை எதிர்த்துப் போராடுவதற்கான வழியாகும். ஆனால், இந்த நெருக்கடியான சூழலில் வதந்திகள் மற்றும் தவறான தகவல்கள் அதிகளவில் பகிரப்படுகின்றன.

நிதிக்கொடை நிறுவனங்கள் செலவிட்ட பெருந்தொகைப்பணம் விரயமாகியது எனலாம். பொறுப்புணர்வான தகவல்பகிர்வுக்கான அறிவை சமூக



மட்டத்தில் வளர்த்தெடுக்க ஊடகங்கள் பாடுபட வேண்டும். ஊடகங்கள் சமய சார்பு நிலையாகப் பிரிந்திருந்து செய்திகளை வெளியிடுவத்சியும் கருத்தியல் அழுத்தத்திற்கு ஊடகவியலாளர்கள் ஆளாவதும் தவிரக்கப்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தளவில் ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான சூழலிலும் இவ்வாறான மதவிரோத தகவல்கள் ஊடகங்களால் பரப்பப்பட்டமையையும் காணமுடிந்தது. இதுமதநல்லிணக்கத்திறகு விரோதமான போக்காகும். ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா மற்றும் மேற்குலகின் பல பில்லியன் நிதிகள் கடந்த பல ஆண்டுகளாக செலவிடப்பட்டும் இவ்வாறான நிலைமை தொடர்வது கவலை தருகின்றது. குறிப்பாக, நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக ஊடகங்களுக்குப் பயிற்சியளிப்பதில் பல பில்லியன் பணம் செலவிட்ட பின்னரும் பேரிடர் காலங்களில் ஊடகங்கள் மத விரோத மற்றும் இன்விரோத நிலைபாட்டை கொண்டிருப்பது அவதானிக்கப்படுகின்றது. இது நிதித் திட்டங்கள் எதிர்வரும் காலத்தில் மாற்றி யோசிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும். பொறுப்புணர்வான ஊடகங்களை வளர்த்தெடுக்க இணைந்த செயற்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

### 9. ஊடகக்கல்வி

களநிலை ஊடகப்பணிக்கான ஆளனியினரை



உருவாக்கும் கல்வி தமிழ் ஊடகப்பரப்பில் போதியளவு இல்லாத ஒரு சூழ்நிலையே காணப்படுகின்றது. பல்கலைக்கழகங்களில் காணப்படும் தமிழ்மொழி மூலமான ஊடகக் கல்வி தகுதியானர்களை ஊடகத் தொழிலுக்கு அனுப்ப தவறுகிறது என்பதை புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. பல்கலைக்கழக ஊடகக் கல்விக்கட்டமைப்பு ஊடகத்தொழில்துறைக்கான ஆளனியினரை உருவாக்கும் தெளிவான கட்டமைப்பை வடிவமைக்க முடியாமல் குழப்பத்தில் காணப்படுகின்றது. ஒரு கருத்தியல் சார்பு நிலையை வளர்த்தெடுப்பது, பல்கலைக்கழக ஊடகக் கல்வி விரிவுரையாளர்கள் அரசியல் கட்சி சார்ந்தும் சில அமைப்புக்கள் சார்ந்தும் இயங்குவது, அதனைப் பகிரங்கப்படுத்துவது, தமது சார்பு நிலையை மாணவர்களின் மீது திணிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது அவதானிக்கப்படுகின்றது. இது அடிப்படைவிழுமியங்களை கற்பிக்கத் தவறுவதாகும். இதனால் அச்சமின்றிய – சார்புநிலை அற்ற – ஊடகங்களை வளர்த்தெடுக்கும் பணியில் ஊடகக் கல்வி தனது பங்களிப்பை வழங்கத் தவறியுள்ளது எனலாம். தமிழ் ஊடகக்கல்விப் புலமையாளர்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும். பல்கலைக்கழக ஊடகக்கல்வி நடுநிலைத்தன்மை கொண்டதாக அமையப் பாடுபட வேண்டும். பல்கலைக்கழக நிர்வாகம் நடுநிலையான, சார்பு நிலையற்ற ஊடகக் கல்வியை வழங்குவதை உதிப்படுத்த வேண்டும்.

### முடிவு

இன்று சமூகத்தின் இயங்கு நிலை பற்றி உலகில் வேறுபட்ட கண்ணோட்டம் உருவாகிவருகின்றது. சமூக இடைவெளி சார்ந்து இது அமைகிறது போலும், ஒன்லைன் தொடர்பாடல் சார்ந்ததாக நகர்கிறது. இந்த நெருக்கடியால்ஊடகங்களின் பன்முகத்தன்மைக்கு அச்சுறுத்தலும் அல்லது தாக்குதலும் நடைபெறுகின்றது. ஊடகச் சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு ஆகியவை நம் அனைவரையும் கவலையடையச் செய்கின்றன.

இதற்காக,யுனெஸ்கோ ”ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள், ஊடகங்கள், அரசாங்கங்கள் மற்றும் சட்டத் துறைகளைச் சேர்ந்தவர்கள், உலகெங்கிலும் உள்ள கல்வியாளர்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட புதிய கூட்டணிகளுடன் சேர்ந்து, ஊடகவியலாளர்களுக்கும் அவர்களின் சுதந்திரத்துக்காகவும் உண்மைக்காகவும் போராடுகிறது. என்று குறிப்பிடுகிறது.

இதே வேளை கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி பூமியில் உள்ள ஒவ்வொரு நாட்டையும் ஆக்கிரமிக்கிறது. அதே போல வேகமாக பொய்களும் பரவி புழக்கத்திலிருக்கின்றன. இது நோயை எதிர்கொள்தற்குப் பெரும் சவாலாகவுள்ளது. இந்த ஆபத்தை உணர்ந்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குடரெஸ் தவறான தகவல்களின் வளர்ந்து வரும் எழுச்சியும் எங்கள் எதிரி என்று எச்சரித்துள்ளார்.உலக சுகாதார அமைப்பு இதுஇரண்டாவது நோய்என்று விவரித்துள்ளது.

இதனால் சார்புநிலையற்ற, அச்சமின்றிய ஊடகச் சூழலை உருவாக்க உறுதிபூணுவோம்.

தவறான நச்சுத் தகவல்களை நச்சு நீக்கம் செய்வதற்கு ஒன்று திரளவேண்டுவதோடு, ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி மக்கள் இதழியலை நோக்கி இணைந்து பயணிப்போமாக!

# 8 மாடுகளின் இறைச்சியோடு வந்தவர் கொழும்பில் கைது



அனுமதி பத்திரமின்றி சட்டவிரோதமாக 710 கிலோ கிராம் மாட்டிறைச்சியை லொறி ஒன்றில் ஏற்றி வந்த நபர் ஒருவரை, நீர்கொழும்பு கொச்சிக்கடை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் கொச்சிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பு சந்தியில் பாலம் அருகில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எட்டு மாடுகளை வெட்டி இறைச்சியாக்கி தங்கொட்டுவை பிரதேசத்திலிருந்து லொறி ஒன்றில் ஏற்றி வரும்போது, பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

# பருப்பு, ரின் மீன் ஆகியவற்றின் அதிகூடிய சில்லறை விலை நீக்கம்

கொழும்பு, மே. 03

மைசூர் பருப்பு மற்றும் ரின்மீன் ஆகியவற்றின் அதிகூடிய சில்லறை விலை நிர்ணயம் நீக்கப்பட்டுள்ளதாகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது.

ஏப்ரல் 30ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் சாந்தா திசாநாயக்க கையொப்பத்துடன் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய மைசூர் பருப்பு ஒரு கிலோ கிராமின் விலை 65 ரூபாவுக்கும் 425 கிராம் எடைகொண்ட ரின்மீனின் விலை 100 ரூபாவுக்கும் விலை நிர்ணயிக்கப்பட்டது.

இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மைசூர் பருப்பு மற்றும் ரின்மீன் ஆகியவற்றின் அதிகூடிய சில்லறை விலை நிர்ணயம் நீக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, சீனிக்கான கட்டுப்பாட்டு விலையையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை கடந்த வாரம் நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இடுகாடு சேதமாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

## வலி.தென்மேற்கு தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 03

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கல்லுண்டாய்வெளிப் பகுதியில் நீண்டகாலமாக அமைந்துள்ள நவாலி அமெரிக்க மிசன் திருச்சபைக்கு சொந்தமான இடுகாடு நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறானா செயற்பாடுகள் வன்மையாக கண்டிக்கப்படவேண்டியவை என வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அ. ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்–

நூறு ஆண்டுகள் பழைமைவாய்ந்த இவ் இடுகாட்டில் நினைவுக் கற்கள் அனைத்தும் ஊரடங்கு வேளையில் இடித்து உடைக்கப்பட்டுள்ளது. இது இறந்தவர்கள் நின்மதியாக உறங்கவேண்டும் என அடக்கம் செய்யப்படும் ஓர் புனிதமான இடமாகும். இங்கு அமைக்கப்பட்டுள்ள நினைவுக்கற்களும் அவற்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் சிலுவைகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சமய விரோத செயற்பாடுகளைக் கண்டித்து மத ரீதியாக பாராது அனைவரும் ஒன்றுபட்டு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும்.

நீண்டகாலமாக இப்பகுதியில் இந்துக்களின் மயானமும், கிறீஸ்தவ மதப்பிரிவினர்களின் இடுகாடுகளும் அருகருகே மிகப் புனிதமாக பேணப்பட்டுவந்துள்ளன. அதுமட்டுமன்றி எமது பிரதேசம் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் ஒன்றாய் ஒற்றுமையாய் செறிந்து வாழும் பிரதேசமாகும். எமது பகுதியில் இவ்வாறான விசமத்தனமான செயற்பாடுகள் இதுவரை இடம்பெற்றதில்லை. தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறக்கூடாது என்பதில் மக்கள் மிக கவனமாக இருக்கவேண்டும்.

பல இன்னல்களையும் அழிவுகளையும் கடந்து வந்த எம் மக்கள் மதரீதியாக எக்காலத்திலும் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் அல்லர். பாரிய அழிவுகளை எதிர்கொண்ட காலப்பகுதிகளிலெல்லாம் மத பேதங்களை தாண்டி கோயில்களிலும் தேவாலயங்களிலும் சகோதரத்துவ உணர்வுடன் சரணடைந்து தம் முயிரைப்போல் பிறருயிரையும் காத்துவந்தவர்கள் இன்று இவ்வாறான இழிவான செயல்களில் ஈடுபடுவார்கள் என நான் நம்பவில்லை. நிச்சயமாக இது எமது மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கச் செய்யப்பட்ட ஓர் திட்டமிட்ட செயலாகவே இருக்க வேண்டும். இவ்வாறான மக்களது உணர்ச்சிகளை மதரீதியாகதூண்டிவிடும் இழிவானசெயற்பாடுகளுக்கு மக்கள் ஒருபோதும் இடம் கொடுக்கக் கூடாது.



இவ்வாறான இழிவான செயல்களில் ஈடுபடுவோர் நிச்சயமாக இனம்காணப்படவேண்டும். முறையாக தண்டிக்கப்படவேண்டும்.

இது தொடர்பான விரிவான தகவல்கள் உரிய முறையில் மத விவகார அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படுவதற்காகவும் விசமிகளை இனம்காண்பதற்காகவும் உடனடியாக பொலிசாரிற்கு அறிவிக்கப்பட்டு பொலிஸ் உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்தினை பார்வையிட்டு தமக்கான நடவடிக்ககளை ஆரம்பித் துள்ளனர். எனவே மக்கள் உணர்ச்சிவசப்பட்டு தனிப்பட்ட ரீதியில் மதஒற்றுமைகளைக்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்பதுடன் தொடர்ந்தும் ஒற்றுமையாக இருந்து இவ்வாறு விசமத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவேரை இனம் கண்டு சட்டத்தின்முன் நிறுத்த உதவவேண்டும் என இத்தருணத்தில் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன் என குறிப்பிட்டார்.

# அல்லைப்பிட்டியில் பற்றைக்கு தீ மூட்டி எரித்தனர் விசமிகள்



யாழ்ப்பாணம், மே. 03

தீவகம் – அல்லப்பிட்டிப் பகுதியில் பாடசாலைக்கு அருகிலுள்ள பற்றைக் காணியில் விசமிகளால் மூட்டப்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்ப்பாணம் மாநகர தீயணைப்புப் பிரிவு மற்றும் அப்பகுதி பொது மக்கள் இணைந்து தீயினை அணைத்துள்ளனர்.

அல்லப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்திற்கு அருகில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணி நீண்ட கால மாகதுப்பரவுசெய்யப்படாமல் பற்றைக்காடாக காணப்பட்டது.

அந்தக் காணிக்குள் மிக நெருக்கமாக இருந்த பற்றையை விசமிகள் நேற்று சனிக்கிழமை பின்னிரவு 11 மணியளவில் தீ வைத்துள்ளனர்.

பற்றைகளில் பிடித்த தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியதை அடுத்து அப்பகுதி மக்கள் அதை அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் தீயினை கட்டுப்பாட்டுள்குள் கொண்டுவந்தனர்.

இந்தத் தீப்பரவலால் பெரியளவில் சேதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் — இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.04.2020 இல் வெளியிடப்பெற்றது.